# டர்மரின் 384

சுதாகர் கஸ்தூரி

# டர்மரின் 384

கஸ்தூரி சுதாகர்

**கஸ்தூரி சுதாகர்**

6174, 7.83 ஹெர்ட்ஸ் என்ற அறிவியல் , த்ரில்லர் நாவல்களை எழுதியவரும் மும்பையில் வசித்து வருபவருமான சுதாகர் கஸ்தூரி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அறிவியல் புதினங்கள், கட்டுரைகள் என இதழ்களிலும், மின்னிதழ்களிலும், சமூக வலைத்தளங்களிலும் எழுதிவரும் அவரது ஆர்வம் இலக்கியம், அறிவியல் , ஆன்மீகம் என்று விரிகிறது.

மீண்டும் 384...
என்ன எண் இது?
384 பொருண்மை எண்கொண்ட
மூலக்கூறாக இருக்குமோ?

# பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

# அத்தியாயம் 1

சூரியன் எட்டுமணிக்கே தகிக்கத் தொடங்கியிருந்தது. மே மாத வெயில் மும்பையை வறுக்கும் நாள் என்பது அதிகாலையிலேயே தெரிந்ததால், அபிஜீத் ஏழரைக்கே தன் நீல நிற மாருதி 800-ல் கிளம்பிவிட்டான். 'இன்னும் ஒரு மணி நேரம்தான்' அபிஜீத் நினைத்துக்கொண்டான். 'ஒன்பதுக்கு அப்புறம், இந்த சாலையில் நாய் கூட நுழையமுடியாது. அதற்குள் எப்படியும் கலாநகர் சிக்னலைக் கடந்துவிடவேண்டும்.'

கிணுகிணுத்த செல்ஃபோனின் ஒலி, கண்ணாடிகள் இறங்கியிருந்த காரினுள் புற ஒலிகளில் கேட்கவில்லை... இரண்டாம் முறை அலறியபோதுதான் அவசரமாகக் காரை ஓரங் கட்டினான். பயோஜெனெஸிஸ் கம்பெனியில் இன்டர்வியூ மதியம்தானே? கேன்ஸல் செய்து விட்டார்களோ?

'அபி?' கட்டையான குரல். சுத்தமாக ஞாபகமில்லை. யார் இது? எண்வேறு தெரியாத ஒன்றாக இருக்கிறது.

'நான்... டாக்டர். தாஸ், பயோக்ரோம் லாப். மறந்துட்டியா?'

வியந்தான். அட, இவரா? ‘ஸாரி சார். நம்பர் புதுசா இருக்கு? சொல்லுங்க.’

‘என் ப்ரைவேட் நம்பர் இது. இன்று லாப் வரை வரமுடியுமா? அர்ஜெண்ட்.’

சாலையில் போக்குவரத்து சத்தத்தில் சரியாகக் கேட்கமுடியாமல், உத்தேசமாக உளறினான். ‘ரியாஜெண்ட் ஆர்டரா? போனவாரமே டெலிவரி பண்ணிட்டேனே டாக்டர்?’

‘அதில்ல’ குரல் மறுமுனையில் தயங்கியது, ‘தனியாப் பேசணும்.. பத்துமணிக்கு மேல் வா. முக்கியமான விஷயம்...’ ஃபோன் சட்டென்று வைக்கப்பட்டது.

அபிஜீத் விழித்தான். பயோக்ரோம், மும்பையிலேயே மிகப்பெரிய, படு நவீனமான பரிசோதனைச்சாலை. கான்ட்ராக்ட் ரிசெர்ச் லாப் CRO என்று புற்றீசல்களாக முளைத்த நாய்க்குடைகள் வதங்கி பெருவாரியாக மடிந்தபோது, தனித்து நின்று, தனக்கென்று ஒரு லாபகரமான நிலையை உருவாக்கிக்கொண்ட பிரமாண்டமான ஆய்வக நிறுவனம். அதன் இயக்குநர் கூப்பிடுகிறாரென்றால்? அதுவும், தன்னை? லாப் கெமிக்கல், கண்ணாடிக் குடுவை என்று விற்பவனை?

அபி முகத்தைத் துடைத்துக்கொண்டான். தனது சிந்தனையிலேயே சுயவிரக்கம் உள்ளூற பெருமூச்செறிந்தான். அழைத்தார்கள்தான் ஒருகாலத்தில். எப்படியெல்லாம் வரவேற்றார்கள்? ‘மாஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர்’ என்றாலே

‘கூப்பிடு அபியை’ என்று வருந்தி வருந்தி ஆய்வுக்கூடங்கள் அழைத்த பொற்காலம் இருந்தது. இரண்டு வருடங்கள் முன்புவரை...

அபிஜீத் கைக்குட்டையால் கழுத்து வியர்வையைத் துடைத்துக்கொண்டான். வெயில் எரித்தது. உள்ளேயும் வெளியேயும் புழுங்கியது. எல்லாம் முடிந்துபோனது, இரு வருடங்களுக்கு முன்பு...

‘அனைவருக்கும் என் வணக்கங்கள்’ என்று தொடங்கும் அபியின் குரல் திடமாக... ‘புது மூலக்கூறு கண்டுபிடிக்கும் தங்கள் முயற்சிகளை எங்கள் நிறுவனத்தின் சேவையும், கருவிகளும் நிச்சயம் திருவினையாக்கும். ஆயிரம் உதாரணம் சொல்லலாம் அமெரிக்காவில்...’

இப்படி அவன் சன்னமாக, உறுதியாகத் தொடங்கியதும், விஞ்ஞானிகள் நிமிர்ந்து அமர்வார்கள். பேச்சு முடியும்போது, லட்சக்கணக்கான டாலர் மதிப்புகளுக்கு ஆர்டர் உறுதியாகியிருக்கும்.

அமெரிக்கக் கம்பெனி உற்சாகப்படுத்தியது. கருவிகளை, தேவைக்கேற்ப பொருத்தும் ‘கான்ஃபிகரேஷன் எக்ஸ்பர்ட்’ எனக் கொண்டாடியது... அத்தனையும் ஒரேயொரு சந்தர்ப்பத்தில் தொலைந்தது. நேர்மைக்குப் பரிசு.

பின்னங்கழுத்து எரிந்தது. ஏ.ஸி வேண்டாம். பெட்ரோல் குடிக்கும்... பணமில்லை. அடக்கி வாசிக்கவேண்டும். மணி இன்னும் எட்டரைதான் ஆகிறது. பயோக்ரோம் போய்விட்டு, பயோஜெனஸிஸ்ல் இன்டர்வியூவிற்கு மதியம்

இரண்டு மணிக்குள் போய்விடலாம். காரைக் கிளப்பினான். ஒரு கேள்வி உள்ளே தொக்கி நின்றது.

பெரும் விஞ்ஞானி தாஸ் ரகசியமாக அழைக்கி றார்... எதற்கு?

# அத்தியாயம் 2

பயோக்ரோம் நெருங்குமுன்னே அதன் பிர மாண்டம் தெரியும். 'பயோக்ரோம் எங்கள் மென் பொருளை பயன்படுத்துகிறது' என்று பெருமை யடித்துக்கொள்ளும் ஒரு பிரபல ஜெர்மானிய மென்பொருள் நிறுவனத்தின் பெரிய பெரிய பேனர்கள் நெடுஞ்சாலை ஓரத்தில் ஒளிர, நகர்ப்பேருந்துகள் பயோக்ரோம் நிலை 1, நிலை 2 என்று இரு நிறுத்தங்கள் கொண்டிருந்தன. பயோக்ரோம் வாசலில் இரும்புத் தடுப்புகளைத் தாண்டி உள்ளே கட்டடம் வரை நடந்து செல் வதற்கு ஐந்து நிமிடம் பிடிக்கும். வரிசையாக நடப்பட்டிருந்த மரங்களின் அடியிலும் பெரிய கம்பெனியின் பெரும் பொறுப்பிலிருப்பவர் ஒரு வர் நட்டது என்று பலகைகள் இருந்தன.

அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி, மூலக்கூறு களைச் சேர்த்து புதிய மூலக்கூறுகளை உரு வாக்குவது, அவற்றின் நச்சுத்தன்மை, மருந்துத் தன்மை ஆய்வுகள், செல்களில் பரிசோதனை, மிருகங்களில் பரிசோதனை, மனிதர்களில் பரிசோதனை என்று பல ஆய்வுப் பிரிவுகளைத் தன்னகத்தில் கொண்டது பயோக்ரோம். ஒப்பந்த ஆய்வு என்ற வியாபாரத்தில் பல கோடி

களில் வருவாய் கொண்ட பயோக்ரோம் அறிவியலாலும், திறமையான சந்தைப்படுத்துதலாலும் உயர்ந்தது. 'உங்க ஐடியாவை மட்டும் எங்களிடம் கொண்டு வாருங்கள், வெற்றிகரமாக சந்தைப்படுத்தித் தருகிறோம்' என்ற புத்திசாலித்தனமான விளம்பர வரிகளுடன் பயோக்ரோமின் வெற்றி தொடர்ந்தது.

பச்சைக் கண்ணாடிகள் பதித்த கட்டடம் சூரிய ஒளியைத் தெறித்துக் கொண்டிருக்க, அதனுள், பயோக்ரோம் என்று மிகப்பெரிய எழுத்துக்கள் பின்புலத்தில் அறிவிக்க, வரவேற்பில் இருந்த பெண் ஃபோனில் எண்களை ஒற்றி, மிகச்சன்னமாகப் பேசினாள்... 'டாக்டர் தாஸ்? அபிஜீத் என்று ஒருவர்...' ஃபோனை வைத்துவிட்டு, அனுமதி அட்டையை, புன்னகையுடன் அபிஜீத்திடம் நீட்டினாள். 'இரண்டாம் தளம், மூன்றாவது கேபின்.'

அட்டையை கழுத்தில் அணிந்துகொண்டு, லிஃப்ட்டுக்காக நின்றான். ஏதோ காரணத்தால் லிஃப்டு திறக்கவில்லை. காத்திருந்த வேளையில், மீண்டும் பழைய நினைவுகள் நிழலாடின. மறக்க முயற்சித்தாலும், அவன் நினைவுகள் விடுவதாயில்லை.

'உன் திறமையை இந்தகம்பனி மதிக்கிறது. ஆனால், லக்னோ டெண்டரில் நீ கருவியை வடிவமைத்த விதம் சாதகமாக அமையவில்லை. ஏன்?' டெக்ஸன் உச்சரிப்போடு அந்த வெள்ளைக்காரக் கிழவன் கேட்டபோது அபி முதலில் பொறுமையாகத்தான் பேசினான்.

‘சேல்ஸ் டிபார்ட் மென்ட், வேண்டாததையெல்லாம் லோக்கல் சப்ளையாக சேர்க்கச் சொன்னார்கள்... லக்னோ டெண்டரில் தேவைப்படுவது அவர்கள் சொல்வதில் பாதி போதுமானது நிறுத்தியவன், நினைத்துக்கொண்டான். ‘அந்தப் பணம் லஞ்சமாக பர்ச்சேஸ் ஆபீசருக்கும், உயர் அதிகாரிகளுக்கும் செல்லும். பொருள் வாங்கியதாகக் கணக்குக் காட்டிவிடுவார்கள்.’

‘உன்னை யாருடா கேட்டது? சொன்னமாதிரி கான்ஃபிகர் செய்யவேண்டியதுதானே? நீ சொதப்பினதுல ஆர்டர் போச்சு. காந்தின்னு நினைப்போ?’ சேல்ஸ் மேனேஜர் வினோத் உசுப்பிவிட, வார்த்தைகள் தடித்தன... மூன்று மாத சம்பளத்துடன், கண்ணியமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டான். தெரிந்த ஒரே தொழில் ஆய்வு சார்ந்தவை மட்டுமே. இரண்டு மாதம் திண்டாடியபின், பிப்பெட், கெமிக்கல் என நண்பர்கள் கொடுத்த சிறு ஆர்டர்களில் தொடங்கிய தடுமாற்ற வாழ்க்கை, பணமில்லையெனில் எப்படி உலகம் மிதிக்கும் என கற்றுக்கொடுத்திருந்தது... ஒரேயொரு ஆறுதல் வினயா.

பயோக்ரோம்க்குப் போட்டிக் கம்பெனியான பயோஜெனஸிஸ்ஸில் விலங்குகளில் பரிசோதனை செய்யும் பிரிவில் மேனேஜராக இருக்கும் வினயாவை, கருவிகள் குறித்து பேசப்போனபோது சந்தித்தான். இருவருடங்களாகக் காதல் வளர, வேலைபோனபோது, அவளது நம்பிக்கையூட்டும் பேச்சுகளில் தேறிவந்தான்...

‘அபி. அலையற நேரம் தவிர சும்மா இருந்தேன்னா பலதும் நினைக்கத்தோணும். உன்னை நீயே பிஸியாவைச்சுக்கோ. நீ ஏன் எம்.பி.ஏ படிக்கக்கூடாது?’ அதற்கும் அவள்தான் பணம்கொடுத்தாள். இன்று அவளது கம்பெனியிலேயே பிசினெஸ் டெவலெப்மெண்ட் மேனேஜர் பதவிக்கு இன்டர்வியூ வரை கொண்டுவந்ததே அவள்தான். லிஃப்டுகள் தடைப்படும்போது, மாடிப்படிகள் உதவுகின்றன.

மாடிப்படிகளில் நிதானமாக ஏறினான்.

# அத்தியாயம் 3

டாக்டர் தாஸ் மிக ஒல்லியாக ஒடிந்து விழுந்து விடுவார்போல இருந்தார். கண்களின் தீட்சண்யம் 'நான் மிகப் படித்தவன்' என்று காட்டியது. வெள்ளையாக குறுந்தாடி வைத்திருந்தார். அறையிலிருந்து வெளிவந்து 'இங்கே வேணாம்' என்பதுபோல சைகைகாட்டி, கேன்ட்டீனுக்கு அழைத்துப் போனார். மேலே பார்த்தவாறே ஒரு ஓரமாக நாற்காலியொன்றை இழுத்துப் போட்டு அமர்ந்தார். சி.சி.டி.வியைத் தவிர்க்கிறார்... எதற்கு?

'என்ன விஷயம் சார்?'

'உட்காருப்பா. சொல்றேன்'. கொஞ்சம் பதற்றமாக இருந்தார். கைகளில் ஒரு பென்சிலை அனாவசியமாக உருட்டிக்கொண்டிருந்தார். அவனை நோக்கிக் குனிந்து மிக மிக மெல்லிய குரலில் தொடங்கினார்.

'எதில தொடங்கறதுன்னு தெரியலை. நாங்கள் ஒரு மாலிக்யூலின் இரண்டாம் கட்டப் பரிசோதனையில் இருக்கிறோம். ஆன்ட்டி கேன்ஸர். இங்கிலாந்தில் உருவாக்கிய மூலக்கூறு...'

அவன் மௌனமாக இருக்க, தாஸ் சில நொடிக

ளின் பின் தொடர்ந்தார்.

‘அது எனது ப்ராஜெக்ட். அதற்குத்தான் உன்னோட முந்திய கம்பெனியிலிருந்து மாஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர் வாங்கினேன். எல்.ஸி. எம்.எஸ்.’

‘ம்ம்ம்...’

கையோடு எடுத்து வந்திருந்த லேப்டாப்பை மேஜைமீது வைத்தார். ‘எனது டேட்டா எல் லாம் இதிலே’ தனது லேப்டாப் மீது தட்டினார் ‘இதிலே இருக்கு. லாப்லேகூட எந்த கம்ப்யூட்ட ரிலும் வைக்கலை. அவ்வளவு சீக்ரெட்.’

ஆய்வகங்களில் இது சகஜம். தனது டேட்டா, தனது கருவி என்று படு ரகசியமாக விஞ்ஞா னிகள் வைத்திருப்பார்கள். சிலர் கேலிக்குரிய எல்லைகளைத் தாண்டுவதுமுண்டு. அரசு ஆய்வகமொன்றில் விஞ்ஞானி ஒருவர், தன் ஆய்வுத்தகவல் அடங்கிய மெமரி ஸ்டிக்ஐ, குப் பைக்கூடையில் போட்டு வைத்திருந்தார்.

தாஸ் மேஜை மீது குனிந்தார் ‘இரண்டு நாளா என்னை யாரோ தொடர்ந்து வருவதுபோல ஒரு உணர்வு.’ தயங்கினார்.

‘சார்?’ திகைத்தான். ‘இதுக்கு நான் என்ன செய் யமுடியும்? போலீஸ் சமாச்சாரம்.’

‘எனக்கு சந்தேகம்... இந்த பின் தொடர்தல் ஏனோ இந்த ப்ராஜெக்ட் முடிவுகளுக்குத் தானோன்னு... இங்கே உள் ஆட்களே சம்பந்தப்பட்டிருப்பாங்களோன்னு... அனாவசி

யமா, போலீஸ் அது இதுன்னு பதட்டப்படுத்த விரும்பல. வேண்டாத விளம்பரம் சேரும் இந்த ப்ராஜெக்ட் படு சீக்ரெட்.'

'சரி. இருக்கட்டும். நான் என்ன செய்துவிட முடியும்?'

'என் லேப்டாப்பில் இருக்கும் மென்பொருள்ல ராடேட்டாவைப் பார்க்க முடியும். ஆனால் ஃபார் முலாக்களை இட்டு சிக்கலான பொருண்மை லைப்ரரிகளை சரிபார்த்து, எந்த மூலக்கூறு வடிவம் என்பதைக் காண, அறிக்கை தயார் செய்யத் தேவைப்படும் மென் பொருள் இல்லை.'

அபி, சற்றே எரிச்சலுடன் நிமிர்ந்தான். பெரும்பாலான அறிவியலாளர்களுக்கு அடிப்படை மென்பொருள் லாஜிக் புரிவதில்லை. இயந்திரங்கள் உருவாக்கும் தகவல்படிகள், எந்த இயந்திரத்தின் மென்பொருளில் உருவாக்கப்பட்டதோ, அதில்மட்டுமே பார்க்க இயலும். இந்த தகவல்படிகளை ராடேட்டா என்பார்கள். அதனை, மேலும் கணக்கீடுகளில் ஈடுபடுத்தி, முன்பே அறிந்திருந்த மாதிரிகளின் தகவல்களுடன் பொருத்திப் பார்த்து, எந்த மூலக்கூறு என்பதை அறிந்து, கணக்கிடப்பட்ட முடிவுகளை, அறிக்கைகளில் வெளியிடுவார்கள். இந்த மென்பொருட்கள் அதிக விலையுள்ளவை. இவற்றை இலவசமாக எல்லா கணினிகளிலும் தரமாட்டார்கள். இந்த அடிப்படை வியாபார உண்மையை எத்தனை முறை விளக்கினாலும் விஞ்ஞானிகள் அபத்தமாக அதே கேள்விகளைக் கேட்பார்கள். இவரும் வேறுபடவில்லை.

‘கரெக்ட் டாக்டர். அதை ஒரே யொரு கணி னியில் மட்டும்தான் போட்டு இயக்குவதற்கு லைசன்ஸ் கொடுப்பாங்க. அது உங்க கருவி யோட இருக்கிற கணினியில இருக்கு’ என்றான் அபிஜீத்.

‘அதான் சொல்றேன். என்னால அந்த கணி னியை பொதுப்படையா பயன்படுத்த முடியாது. அதுல என்ன செஞ்சாலும், தகவல் தொடர்புத் துறை கிட்ட இருக்கிற நெட்வொர்க் அட்டாச் ட்ஸ்டோரேஜ்... டேட்டாவைப் பிடிச்சிரும்ங்க றாங்க. உண்மையா?’

‘ஆமா’ என்றான் சிந்தனைவயப்பட்டு. பயோக்ரோம் நாலுமில்லியன் டாலர்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்கி, கணினிகளுக்கு மட்டுமே செலவழித்தது. நெட்வொர்க்கில் வந்த அனைத்துடேட்டாவும், NAS, SAN கட்டமைப்பு மூலம் அங்குள்ளோர் அறியாத மற்றொரு இடத் திற்கு ஒவ்வொரு நாளும் கொண்டு செல்லப் படும். பயோக்ரோம் கணினித்துறை அறியாது ஒரு டேட்டாவும் உருவாக்கவோ, அழிக்கவோ முடியாது. தகவல் பாதுகாப்பு மிக முக்கியம் என்பதை அறிந்த பயோக்ரோம் முன்பே இந்தச் செயல்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருந்தது.

‘உங்க கம்பெனி நெட்வொர்க் கணினிகள்ல தகவல்களை தனியாக சேமித்து வைக்க முடி யாது டாக்டர். ஒரு மென்பொருள், பொதுவாக எல்லா மடிக்கணினிகளையும் ஸ்கேன் பண் ணிட்டே இருக்கும். எதாவது புதிய கோப்புகள்

உருவானாலே, அதனோட ஒரு பிரதி, நீங்க அறியாமலேயே இன்னொரு இடத்துல சேமித்து வைக்கப்படும்.'

மெல்ல எழ முயற்சித்தான். இந்த வேண்டாத பேச்சுக்குப் பதிலாக, ரெண்டு லிட்டர் அஸெட்டொ நைட்ரைல், மெத்தனால் என்று இவர் கொஞ்சூண்டு ஆர்டர் கொடுத்திருந்தா லும், இங்கு வந்த பெட்ரோல் செலவு சரியாயி ருக்கும்.

# அத்தியாயம் 4

‘உனக்கு இந்தக் கருவியும் மென்பொருளும் அத்துப்படி. நிறைய இடத்துல நீ வித்திருக்கே. என்னாலே, இந்த டேட்டாவெல்லாம் இங்கே வெச்சு ஆராய முடியாது’ கொஞ்சம் நிறுத்தி னார் தாஸ். பென்சில் இன்னும் அனாவசியமாக உருண்டுகொண்டிருந்தது.

‘இதன் மென்பொருள் போட்ட வேறொரு கம்ப்யூட்டரில், நீ எனக்காக இந்த டேட்டாவை போட்டு, ரிசல்ட் கொண்டு வரணும். அவ்வளவு தான்’ அபிஜீத்திற்குள் சிறு கோபம் எழுந்தது...

‘யார் செய்வாங்க சார்? இப்போது நான் அந்த கம்பெனில இல்லை. யாரும் ஏறெடுத்தும் பார்க் கமாட்டாங்க. உங்க டேட்டாவை வேறொரு கம் பெனி கணினியில போட யாரும் அனுமதிக்க மாட்டாங்க. பெரிய ரிஸ்க்.’

‘புரியுதுப்பா’ என்றார். ‘எப்படியாவது ஒரேயொரு தடவை செய்துதந்துடு.’

அபிஜீத் யோசித்தான். இதற்கு சரியான கம்பெனி... பயோஜெனஸிஸ்... அவர்களிடம் இந்தக் கருவி இருக்கிறது. சொன்னால் வினயா கேட்பாளா?

‘ஒரு வாரம் கழிச்சு சொல்றேன் டாக்டர்.’

‘ஓ… நோ. இது அர்ஜெண்ட். இன்னிக்கு, நாளைக்குள்ளே செய்யணும்.’

‘எப்படி சார் முடியும்?’

‘முடியணும். மாட்டேன்னு சொல்லிடாதே.’

அவர் கண்களில் வினோதமான பதற்றம் தெரிந்தது.

‘டேட்டா மட்டும் போதாது. டாக்டர். எப்படி செய் யணும்னு ப்ரோக்ராம் கோப்புகள் வேணும், அதுவும், அதே மாடல் கருவியிலே போடறமா திரி.’

‘எல்லாம் இதுல இருக்கு. எங்க போட்டியாளர் கள் எல்லோரிடமும் இதே கருவி, இதே மாடல், இதே மென்பொருள் வெர்ஷன்தான் இருக்கும்.’ அவர் நீட்டிய யூஎஸ்பி கறுப்பாகப் பளபளத்தது. ‘யார்கிட்டேயும் சொல்லாதே. முக்கியமா, இங்கே மூச்சுவிட்டுறாதே’ சொன்னவரின் குரல் மூச்சுக் காற்றாய் வந்தது.

‘முயற்சி பண்ணிப் பார்க்கறேன். க்யாராண்டி கிடையாது டாக்டர்.’ யூஎஸ்பியை வாங்கிக் கொண்டவன், அவர் எழுந்துவிட, தானும் எழுந்தான். டாக்டர் தாஸ் தன் அறையை நோக்கிப் போக, அவரைப் பின்தொடர்ந்தான். அங்கு, டெலிவரி செய்யப்பட்ட கெமிக்கல்கள், ரியேஜண்ட்டுகள் பற்றி பொதுப்படையாக அவர் கள் தொழில்குறித்துப் பேசியபின் அவன் கிளம் பினான். ‘புது லேப்டாப்பா சார்? நல்லா இருக்கு.

போனதடவை தோஷிபா இருந்ததாக ஞாபகம்...'

தாஸ் சிரித்தார். 'ஆமா. ஆனா எல்லாம் ஒரே குப்பைதான். வேகத்தைப்பாரு. என்னோட பழைய எம்.எஸ் டாஸ் போட்டது தேவலைன்னு தோணுது...'

காரில் அமர்ந்தவன் மெதுவாகக் கிளப்பி நெடுஞ்சாலைக்குத் திரும்புவதற்கு சிக்னலுக் குக் காத்திருந்தான். எங்கே போவது...? வினயா விடம் கேட்கலாமா? தவறாக நினைப்பாளோ? ஆ... அந்த புதிய கம்பெனி சிஸ்கிராஃப்? டாக்டர் நட்கர்னி கேட்டுக்கொண்டால் செய்வான்... ஃபோன் பண்ணலாமா? செல்ஃபோனை எடுத்தான். கார் கதவருகே ஏதோ நிழலாடியது. கூலிங்கிளாஸ் அணிந்த நாகரிகமான மனித னொருவன் கதவைத் தட்டினான்.

'ஹலோ...'

'யெஸ்?' என்றான் அபி முகத்தில் கேள்விக்குறி யுடன்.

'பின் டயர்லே காத்து இல்லே. பாருங்க' சொன்ன மனிதன் முன்னே போக, கதவைத்திறந்து இறங்க முயன்ற அபிஜீத், சரேலென தலையில் அடிவிழ, நிலைகுலைந்தான்... கண்கள் இருட் டிக்கொண்டு வர, காரினருகே சரிந்தான்.

## அத்தியாயம் 5

‘டாக்டர் தாஸ்... என் நேரத்தை வீணடிக்காதீர்கள்... ஆறுமாதங்களாக உங்கள் ஆராய்ச்சியில் தகுந்த முன்னேற்றமில்லை என தணிக்கை குழு சொல்கிறது. இங்கு உழைப்புக்கு மட்டும் தான் மதிப்பு’ குரல் உயர்த்தி, மேஜைமேல் காகிதங்களை எறிந்தவருக்கு அறுபது வயது இருக்கும். பயோக்ரோம் அன்று பதற்றமாக இருந்தது. டாக்டர் மேத்தா வந்திருக்கிறார் என்றால் ஏதோ பெரிய அளவில் ஏதோ நடக்கக்கூடாதது நடந்திருக்கவேண்டும். அபி, கிளம்பிப்போன முப்பது நிமிடத்தில், பயோக்ரோம் மேத்தாவின் திடீர் வரவில் பதற்றமடைந்திருந்தது.

‘டாக்டர் மேத்தா, எனது முப்பது வருட அனுபவத்தில் இதுவரை யாரும் இப்படிப் பேசியதில்லை. திஸ் இஸ் இன்ஸல்ட்டிங்.’ தாஸ் படபடத்தார். அந்தக் கண்ணாடி கேபின் வாசலில் ‘டாக்டர் எஸ். மேத்தா, சி.ஓ.ஓ’ என்ற பித்தளைப்பலகை பிரஸ்ஸோவில் பளிச்சிட்டது. மாதத்தில் எப்போதோ வரும் மேத்தாவுக்கு என்று ஒரு கேபின் எப்போதும் தயாராக இருக்கும்.

‘டாக்டர் தாஸ், தணிக்கைக் குழுவின் பரிந்து ரைகளை நான் மட்டுமல்ல, யாரும் மீறமுடியாது. இன்னும் இரு நாட்களில் நீங்கள் சரியான காரணங்கள் தந்தேயாகவேண்டும்... தங்களது முக்கிய பணிகளிலிருந்து இந்த மீட்டிங்கிற்கு வந்ததற்கு நன்றி.’

தாஸ் எழுந்தார் ‘முயற்சிக்கிறேன்.’

சொல்லாமல் சொல்கிறார், மேத்தா ‘நீ போக லாம்’ என... தாஸின் தாடை இறுகியது. சற்று தடு மாறிய படியே தனது கேபினில் நுழைந்து, தொப் என சேரில் அழுந்தினார்.

‘டாக்டர் தாஸ்?’ இன்டர்கம் கிணுகிணுத்தது. ‘இரண்டு பேர் உங்களைப் பார்க்க வந்திருக்கி றார்கள்... அப்பாயின்ட்மென்ட் இருக்காம்.’

‘யாருக்கும் அப்பாயின்ட்மென்ட் கொடுக்க லையே? எந்த கம்பெனி?’

‘ஏதோ போர்ட்டபிள் அனலைஸர் ஸிஸ்டம் பத்தி பேசணுமாம்.’

‘சரி வரச்சொல்.’

உள்ளே நுழைந்தவர்கள் வெள்ளைச் சட்டையில் பச்சை நிற கழுத்துப்பட்டை அணிந்திருந்தார்கள். அவர்களில் ஒருவனின் சிரிப்பு வினோதமாக இருந்தது. நாற்காலியில் அமராமல், நேராக தாஸை நெருங்கினார்கள். அவர் சப்தம் எழுப்புமுன், மேஜையைத்தாண்டி ஒருவன் லேப்டாப்பை மூடினான்.

அபிஜீத் விண்ணென்று தெறித்த பின்னந்த லையைத் தடவிக்கொண்டான். தலை பாரமாக கனக்க தள்ளாடினான். சர் சர்ரென்று லாரிகள் விரைய, குழம்பினான். 'எங்கே இருக்கிறோம்?' கார், பிளிங்கர் விளக்குகள் பளிச்சிட, கச்சி தமாக, சாலை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது. பூனா 54 கி.மீ. என்றது மைல்கல்... திகைத்தான். 'மை காட்... பூனா ஹைவே... எப்படி வந்தேன்? பயோக்ரோம்லிருந்து இங்குவரை கிட்டத்தட்ட முப்பது கிலோமீட்டர்... ஏன் வந்தேன்? யார் ஓட் டினார்கள்? வாட்சைப் பார்த்தான். மதியம் 2.30 மணி. வினயாவுக்கு ஃபோன் செய்யவேண்டும்... இன்டர்வியூ நேரம் கடந்துவிட்டதேன்...

'எங்க இருக்கே அபி?' என்றாள் மறுமுனையில் வினயா பதற்றமாக. ஹெச்.ஆர் மேனேஜர் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிட்டு கிளம்பிப் போயிட்டார்.

'ஸாரி வினயா. ஒரு சின்ன வேலை பயோக் ரோம்ல.'

'என்ன வேணாலும் இருக்கட்டும். ஒரு ஃபோன் பண்ண முடியாது உன்னால? ஹெச்.ஆர்கிட்ட எவ்வளவு நாள் அலைஞ்சேன் தெரியுமா? உனக்கு ஒரு பொறுப்பே இல்ல. உன்ன கட்டிக் கிட்டு எப்படி வாழ முடியும்?'

'வினயா, அப்புறம் எல்லாம் விவரமா சொல் றேன்.'

'என்ன சொல்லுவ? வழக்கம்போல 'பயோக் ரோம்ல அவன் அப்படி எடுத்தெறிஞ்சு பேசி

னான், உடைஞ்சு போயிட்டேன்’னு ஒக்காந்தி ருப்பே. இவ்வளவு சென்ஸிடிவா இருந்தா எப்படி வேலை செய்ய முடியும்? என்னிக்கு நிதர்சனமா வாழக் கத்துக்கப் போற? எனக்கும் அயர்வா இருக்கு அபி.’

‘வினயா, ப்ளீஸ். அப்படியெல்லாம் ஒண்ணு மில்ல. கொஞ்சம் உடம்பு சரியில்லைன்னு ஹெச்.ஆர்கிட்ட சொல்லி இன்னொரு அப் பாயின்ட் மென்ட் வாங்கிரு ப்ளீஸ்... சின்ன ஆக்ஸிடெண்ட்.’

‘மைகாட். என்ன ஆச்சு? எங்க இருக்கே?’ அவளை அமைதிப்படுத்திய வாறே, லேப்டாப் பையை அவசரமாகத் திறந்து பார்த்தான். யூஎஸ்பி எங்கே? அதைத்தவிர, எல்லாம் இருந் தது. செல்ஃபோனிலிருந்து தாஸ் நம்பரைத் தேடினான். இன்றே அதனை ஆராயவேண்டு மென்றாரே அவர்? இன்னொரு காப்பி வேண் டுமானால் அங்கிருந்து எடுத்துக்கொண்டு போகலாம்.

‘வினயா. எனக்கு ஒண்ணுமில்ல. பயப்படாதே. சாயங்காலம் போரிவல்லி ஸ்டேஷன்ல மீட் பண்ணலாம். விவரமா சொல்றேன்.’ அடுத்தது தாஸை அழைத்தான்.

டாக்டர் தாஸின் ஃபோன் மணி அடித்துக் கொண்டேயிருந்தது. இரண்டு நிமிடம் கழித்து நின்றும் போனது. அபிஜீத் பயோக்ரோம் வாசலில் வந்தபோது, பலரும் கிளம்பிக் கொண் டிருந்தனர். வரவேற் பறைப்பெண், தோள்

பையை மாட்டிக்கொண்டிருந்தாள். ‘சாரி சார். விசிட்டிங் டைம் அஞ்சு மணி வரைதான். டாக்டர் தாஸ் இப்போ இல்லை. ரெண்டுபேர் கூட கிளம்பிப்போயிட்டார்.’

‘எங்க போனார்னு தெரியுமா?’

‘தெரியாது சார். என்னவோ போர்ட்டபிள் அனலைஸர் கம்பெனின்னு எழுதியிருக்காங்க. டாக்டர் டெமோ பார்க்கப் போறதாக போகும் போது சொன்னாங்க.’

போர்ட்டபிள் அனலைஸர்? இவரது ஆய்வில் இது எதற்கு? என்னவோ தவறு நடந்திருக்கிறது... அபிஜீத்திற்கு உள்மனம் உறுத்தியது. ‘டாய்லெட் எந்தப்பக்கம்?’

டாய்லெட் பக்கம் ஒதுங்கி, மாடிப்படி தாவியேறி, தாஸின் கேபினுக்கு விரைந்தான். மூடப்பட்டிருந்தது. கண்ணாடிக் கதவின் வழியே உற்றுப் பார்த்தான். லைட் எரிந்துகொண்டிருந்ததில், லேப்டாப்பின் ஸ்க்ரீன் ஸேவரில் ‘பயோக்ரோம்’ என்ற எழுத்துகள் மாறிமாறி வந்துகொண்டிருந்தன.

அங்கேயே இரவு ஏழு மணி வரை காத்திருந்தான். தாஸ் திரும்பிவரவில்லை.

# அத்தியாயம் 6

இன்ஸ்பெக்டர் மராட்டே தொப்பியைக் கழற்றி முன் வழுக்கையில் வியர்வையை கர்ச்சீப்பால் துடைத்தார். தொப்பி இட்டிருக்கும்போது அசத்தலாக இருந்தவர்முகம், தொப்பி கழன்றால் வயதாகத் தெரிகிறது.

'இந்த சிந்தனை தேவையா?' தன்னைத் தானே திட்டிக் கொண்டான் அபிஜீத். போலீஸ் ஸ்டேஷனின் வாசலில், பொன்னிறமான சிறு இலைகள் உதிர்த்திருந்த பெயர் தெரியா மரத்தினடியில் மாருதியை நிறுத்தி நின்றிருந்தான் அவன். பயோக்ரோம், தாஸ் காணாமல் போனதில் கொடுத்த புகாரில், அவரை இறுதியாகச் சந்தித்தவர்களையெல்லாம் போலீஸ் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது.

உள்ளே, கான்ஸ்டபிள் தோர்வே கவலையோடு தொப்பையைச் சொறிந்து கொண்டார். இன்ஸ்பெக்டரின் மூடு சரியில்லையோ? ரெண்டு மணி நேரம் பெர்மிஷன் இன்னிக்கு கிடைக்காதுபோல... மகளிர் போலீஸ் அஸ்மிதாவை அழைத்துக்கொண்டு ஆர்மால் வரை போய் வரலாமே என்ற திட்டம் சிதைந்துவிடுமோ?

‘தோர்வே, உங்க ஏரியாதானே செக்டார்த்ரீ ஏ?’

‘ஆமாசார்’ என்றார் தோர்வே, உள்ளூர கலவர மடைந்து. த்ரீஏ மூன்று கி.மீ.தூரம்... போய் வரவே ஒரு மணி நேரமாகும். அதற்குள் அஸ்மிதா கிளம்பிவிடுவாளே?

‘உங்க ஏரியாவுல வழக்கமா என்ன மாதிரி கேஸ் வரும்?’

‘அங்? என்ன... லேபர்த கராறு, சிக்னல் மீறி னவன், பேப்பர் இல்லாத லாரி, ஓவர்லோடு டேங்க்கர், ஸ்க்ரேப் யார்டுல கம்பி திருட்டு.’ ஒரு தொழிற்பேட்டைப் பகுதியில் வேறென்ன வரும்?

‘தோர்வே, துருப்பிடிச்ச கம்பி திருடு போகலை. ஒரு டைரக்டர் தொலைந்து போயிருக்காரு.’

‘சார்?’ தோர்வேக்குப் புரியவில்லை. டைரக் டர்களை ஸ்க்ரேப் யார்டுல எந்த மடையன் போட்டான்?

‘பிடிச்சரலாம் சார். நம்ம ஏரியாவுல எல்லா மாமூல் பார்ட்டிகளையும் ரவுண்டு கட்டடறேன். நாளைக்கே டைரக்டரை கொண்டாந்திரலாம்.’ தோர்வேயின் பதிலில் மராட்டே மகிழ்ச்சிய டைந்தாகத் தெரியவில்லை.

‘ஒரு பார்ட்டி வெளிய நிக்கறான் தோர்வே. அபிஜீத்னு... கூட்டிட்டு வாங்க’ அஸ்மிதா டிபன் பாக்ஸை பையில் வைத்துக்கொண்டு தனது ஆக்டிவா நோக்கி நடப்பது தெரிந்தது. தோர்வே தளர்ந்தார்.

‘அதான் சொல்றேனே சார். யார் என்னை அடிச்சாங்கன்னு தெரியலை. இன்னும் வீக்கம் இருக்கு பாருங்க’ அபிஜீத் மீண்டும் சொல்லச் சொல்ல தோர்வேயும் மராட்டேயும் நம்ப வில்லை.

மராட்டே ஏதோ பேசத் தொடங்கியபோது செல்ஃபோன் அதிர, எடுத்தவர் விறைத் தார். ‘எங்கூடவா’ அவனுக்குக் காத்திராமல் விரைந்து போலீஸின் குவாலிஸ் வண்டியைக் கிளப்பினார். அபி ஓடி வந்து ஏறிக்கொண்டான். வேன் மும்பை ஏர்போர்ட் அருகே ஆர்க்கிட் ஓட் டலில் அரை மணியில் நுழைந்தது.

நாலாவது மாடியில் இருந்த அறைக்கு, லிஃப்ட் அருகிலும், மாடிப்படியிலும் இருவர் காவலுக்கு இருந்தனர். போலீஸ் என்று உடலமைப்பு காட்டினாலும், அவர்களில் எவரும் சீருடை அணிந்திருக்கவில்லை. விறைப்பாக மராட்டே அடித்த சல்யூட்டை, ஏற்றுக்கொண்ட சோஃபா வில் அமர்ந்திருந்த அந்த மனிதர், உட்காருமாறு இருவரையும் பணித்தார்.

‘இந்த தாஸ் கேஸு... மராட்டே எத்தனை நாளா பாக்கறீங்க?’

‘ரெண்டு நாளாசார். நீங்க வந்திருக்கீங்கன்னு ஏ.ஸி.பி சார்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிடட் டுமா?’

‘வேண்டாம்’ என்பதுபோல அம்மனிதர் கையசைத்தார். நெடிய, ஒல்லியான, கோதுமை நிறதேகம். பழுத்த அனுபவமுடையவர் என்பது

முகத்தில் தெரிய, அவரது கூரிய விழிகள் அசாதாரணமாக ஒளிர்ந்தன.

‘அபிஜீத், ஐயாம் ராஜீவ். ஸ்பெஷல்டாஸ்க் ஃபோர்ஸ். இந்த தாஸ் விஷயம் டெல்லியை உலுக்கியிருக்கு. நீ சொன்ன அந்த யூஎஸ்பி எங்க?.’

அபிஜீத் பொறுமையிழந்தான் ‘சார், நானே பிப்பெட்டு, ப்யூரெட்டு, க்ளாஸ் வேர்னு வித்துட்டிருக்கேன். அவரோட யூ எஸ் பி வைச்சு என்ன பண்ணுவேன்?’

ராஜீவ் அவனை ஊடுருவிப் பார்த்தார். ‘நிதானமா நடந்ததை ஒன்றுவிடாம சொல்லு. நினைவிருக்கட்டும். திஹார் சிறை காத்துக்கிட்டிருக்கு.’

அபி, பதறாமல் மீண்டும் அன்று நடந்ததையெல்லாம் சொன்னான். சற்று சிந்தித்தபின் ராஜீவ்எழுந்தார் ஆல்ரைட். நாளைக்கு காலேல எட்டு மணிக்கே பயோக்ரோம்க்கு வா. இந்த கேஸ் முடியற வரை எங்கயும் முட்டாள்தனமா ஓட நினைக்காதே, தொலைச்சிருவேன்...’

‘அபியை வெளியே போகுமாறு சைகை காட்டிய ராஜீவ், அவன் போனதும்’ இவனை அப்ஸர்வேஷன்ல வைங்க. பாதுகாப்பு தேவைப்படும். அவனுக்குத் தெரிய வேண்டாம். உங்க ஏஸிபிக்கு சொல்லாம இந்த கேஸ்ல எங்கூட வேலை பாக்கணும். முடியுமா?’

மராட்டே முழிபிதுங்கினார். முடியாதுன்னா இந்தாளு அடிப்பான். முடியும்னா ஏஸிபி விட

மாட்டார்.

‘முழிக்காதீங்க. வேறவழியில்லை. ஒரு மரியாதைக்கு கேட்டேன். வேலை செஞ்சே ஆகணும். நாளைக்கு ஏழரைக்கு இங்கவந்து என்னை பிக் அப் பண்ணுங்க. நேரா பயோக்ரோம் போறோம்.’

மராட்டேயின் முகம் தளர்ந்தது. இனி என்ன அழுதும் பயனில்லை.

# அத்தியாயம் 7

‘எங்க தொழில்ல போட்டி மிக அதிகம். ரொம்ப சீக்ரெட்டாகத்தான் எல்லா ஆய்வுகளும் செய்வோம்...’ மேத்தா விளக்க, எதிரே இருந்த ராஜீவ், முடிநிறைந்த கைகளை வெறுமே சொறிந்துகொண்டிருந்தார்.

‘போலீஸ்ல புகார் அடுத்த நாளே கொடுத் துட்டோம். வெளியே தெரிந்தா, வெளிநாட்டு பிஸினஸ் படுத்துடும். அதுவும் டாக்டர் தாஸ் பெரிய விஞ்ஞானி. அதான், மினிஸ்டர் ஸ்ரீவத் ஸவாகிட்டே நானே ஃபோன் பண்ணினேன்’ மேத்தா சொன்னதும், ராஜீவ் தலையாட்டினார்.

‘மினிஸ்ட்டர் அதான் எங்கிட்ட பெர்ஸனலா பாக்கச் சொன்னார். தாஸுக்கும் உங்களுக்கும் எதாவது தகராறு... சமீபத்தில்?’

‘இல்லை. தரத் தணிக்கை கமிட்டி அவரது ஆராய்ச்சியில தவறு குறித்து சொன்னது. விளக் கம் தரும்படி சொன்னேன். கோபிச்சுக்கிட்டு போனார்.’

‘ஒரு வாரமா, ஆபீஸ்ல அவருக்கு வந்த ஃபோன்களின் நம்பர், அவர் போன் செய்த நம் பர்கள், அவரைப் பார்க்கவந்தவர்களின் விபரம்

தெரியணும்.'

'நிச்சயம். வேறஎன்ன வேணும்னாலும் தாரா ளமா கேளுங்க.'

ராஜீவ் வெளியே சென்றதும், 'மராட்டே, எதாவது வித்தியாசமா இந்த ஆள்கிட்ட கவனிச்சீங் களா?' என்றார்.

'இல்ல சார். மேத்தாவின் பாடி லேங்வேஜ் உண் மையானதா படுகிறது.'

மராட்டே, அட்மின் பகுதியில் கேள்விகளைத் தொடுக்க, ராஜீவ், பர்ச்சேஸ் பக்கம் போனார். எங்கு துப்பு கிடைக்குமென்பது தெரியாது. சலிப்பின்றி எல்லாம் பார்க்க வேண்டும். பர்ச் சேஸ் மேனேஜர் அறையினருகில் இருந்த இளைஞனை அழைத்தார். 'தாஸ் இது வரை கொடுத்திருக்கிற பர்ச்சேஸ் விண்ணப்பங்கள் அனைத்தையும் காட்டுங்க.'

தடியான இருபாக்ஸ் கோப்புகளை அவன் மரியாதையாகக் கொடுத்து விட்டு நகம் கடித்து நின்றான். சற்று தொலைவிலிருந்த அவனது மேஜையை அவனறியாமல் நோட்டம் விட்டார். 'வினய்மதம் வார். நீங்க நாக்பூரா?'

'ஆமா' என்றான் அவன் மகிழ்ந்து. 'எப்படி தெரியும்?'

மதம்வார் என்ற நாக்பூர் பக்கமான குலப்பெயர் சில வட இந்தியர்களுக்கும் தெரிந்திருக்கலாம் என்று சொல்லாமல், ராஜீவ் புன்னகைத்தார்.

'ஃபைல் எல்லாம் ஒழுங்கா வச்சிருக்கீங்க.

கேட்ட உடனே எடுத்துவர்றீங்க. தொழில் சுத்தம், நேர்மை, சுறுசுறுப்பு... இதெல்லாம் மும்பை ஆட்களுக்கு எங்க வருது? விதர்பா ஆட்களுக்கு ரத்தத்துல இருக்கும். அதுதான் கேட்டேன்.'

'ஹி... ஹி' என்றான் உச்சி குளிர்ந்து, நாக்பூருக்கே உரிய மண் விசுவாசத்தில்.

'வினய், ஒரு விஷயம் சொல்லுங்க. தாஸ் வாங்கியிருக்கிற, வாங்க கொடுத்திருக்கிற பொருட்கள்ல எதாவது வித்தியாசமா உங்களுக்குப்படுதா?'

'சார்' என்றான் தயங்கி 'அவரு ரெண்டு மாஸ் ஸ்பெக்ட்ரோ மீட்டர் வாங்கினாரு. அதுல என்னமோ தவறு இருக்குன்னு அவர் கீழவேல பாக்கிற டாக்டர் சுனந்தாகாமத் ஒரு நாள் சொன்னதை ய தேச்சையா கேட்டேன்.'

'என்ன தவறு?'

'தெரியலை. டெக்னிகல் சமாச்சாரம். சுனந்தா பயங்கர புத்திசாலி. சீனியாரிட்டிபடி அவங்கதான் தாஸுக்கு அடுத்த தலைமைப் பொறுப்பு எடுத்துக்கணும். போன வாரம் ரெண்டு பேருக்கும் பயங்கர வாக்குவாதம் தாஸ் ரூம்ல...'

சுனந்தாவைப் பிடிக்க வேண்டும் என்று நினைத்தவாறே ராஜீவ் வாசலுக்கு வந்தபோது மராட்டே யாருக்கோ ஃபோனில் ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார். அவர்முகம் இறுகியிருந்தது.

‘அடுத்த கெட்ட செய்தி. இங்கவேலை செய்யற சுனந்தான்னு ஒரு பொண்ணை...’

ராஜீவ் பதற்ற மானார் ‘யெஸ்?’

‘யாரோ அடிச்சுப் போட்டிருக்காங்க. ஹிண்டுஜா ஆஸ்பிட்டல்ல சேர்த்திருக்காங்க. கோமாவில் நழுவிக் கொண்டிருக்கிறாள்.’

# அத்தியாயம் 8

மும்பையின் கோரேகான்வ் பகுதியில் ஓபராய் மால் பிரபலம். அபிஜீத் சற்றுத் தொலைவில் ஒரு குறுக்குத் தெருவில் காரை நிறுத்திவிட்டு மால் நோக்கி நடந்தான். மாலில் கார் நிறுத்த அறுபது ரூபாய்... அந்த பைசாவில் இரண்டு நாள் தயிர் வாங்கி, சோறு பொங்கி ஓட்டிரலாம்.

வினயா மால் வாசலில் ஆட்டோவில் வந்து இறங்கினாள். அபி 'ஹலோ' என்றான் புன்ன கைத்து. ஒன்றும் பேசாமல் உள்ளே நுழைந் தாள். அவன் பின்தொடர்ந்தான்.

'என்ன கோபம் இப்ப? அதான் சொல்லிட் டேனே? யார் ஏன் அடிச்சாங்கன்னு தெரியலை... போலீஸ் கேஸ்ன்னு இப்ப.'

'உன்னை யாரு பயோக்ரோம் போகச் சொன் னது? நேரா என் ஆபீஸ் வந்திருக்கலாம்ல? உனக்கும் சேத்துத்தான் லஞ்ச் கொண்டு வந்திருந்தேன். அம்மா கேட்டா... யாருக்குடீ இவ்வளவு அடைச்சு கிட்டுப்போறேன்னு. ஸ்மித்தாவுக்குன்னு சொல்லி வைச்சிருந்தேன்.'

'ஸாரி. தாஸ் கூப்பிட்டதும் அங்க போயிட்டேன். நீ சீக்கிரமா வரச் சொல்லவே இல்லையே?'

‘நான் சொன்னாத் தான் வருவியோ? என்னைப் பாக்கணும்னு உனக்காத் தோணலை இல்ல? ஸோமீன்.... உனக்கு காதலே கிடையாது. சும்மா பேச்சு தான்’

அபி தலையைச் சொறிந்தான். நானா போய் நிக்கணும்னு எதிர்பார்க்கிறாள்.... மத்த வேலையை எவன் பார்ப்பான்? இவள் எதிர் பார்ப்புகள் என்று மே புதிராகத்தான் இருக்கின்றன.

‘ஸாரீ. வேலை இருக்குன்னு...’

‘என்ன வேலை?’ பொரிந்தாள் வினயா ‘என்னை விட அப்படி முக்கியமா அந்த தாஸ்? பாரு... இப்ப மாட்டி கிட்டு முழிக்கறே.’

அபி கண்கள் நிறைய மறுபுறம் திரும்பினான். வினயா அவன் தோளை ஆதரவாகத் தொட்டாள்.

‘அபி’ அவள் குரல் உடைந்தது ‘சாரி. என் வீட்டுல என்ன ப்ரஷர் இருக்குன்னு உனக்குத் தெரியாது. யு.எஸ்ல இருக்கிற ஒரு மாப்பிள்ளையப் பாத்திருக்காங்க. அவன் ஃபோட்டோவைப் பாத்து ஓகேன்னுட்டான்னு அம்மா நேத்திக்கு சொல்லிட்டிருந்தா. நான் இன்னும் நம்ம விஷயத்தை வீட்டுல சொல்லலை.’

‘சொல்லிறலாம் வினயா. ஆனா...’ அபி தடுமாறினான்.

‘புரியுது. உனக்கு முதல்ல ஒரு வேலை அமையட்டும். சொல்லலாம்னு தான் நானும் இருந்தேன். ஆனா தினசரி ‘என்ன சொல்றே?’

ன்னு கேக்கற கேள்விக்கு என்னபதில் சொல் லட்டும்? இதுல இப்படி ஒரு சோதனை... அந் தாளு தாஸ்... கிடைச்சானா இல்லையா?’

அபி, அவளிடம் அனைத்தையும் சொன்னான். பின், பயோக்ரோம் நோக்கிக் கிளம்பினான்.

அபிஜீத், பயோக்ரோம் வாசலில் வந்தபோது, மராட்டேயுடன் ராஜீவ் வெளியே வந்து கொண் டிருந்தார். சுனந்தா பற்றி கேள்விப்பட்டு ‘மைகாட்’ என்றான் கலவரத்தோடு. ‘இது என் னமோ பெரிய கேஸா இருக்கு சார்.’

ராஜீவ் அவனைக் கூர்ந்து பார்த்தார். ‘பயோக் ரோம் மாதிரி எத்தனை கம்பெனி இருக்கு இங்கே?’

‘எக்கச்சக்கம் சார். ரெண்டு பெட்ரூம் ஃப்ளாட்ல கூட லாப் ஆரம்பிச்சாங்க. டாலர் மோகம். ஆனா ரெண்டு வருஷமா பிசினஸ் மந்தம்.’

‘பெரிய கம்பெனி எத்தனை? தாஸ் மாதிரி ஆட் களை வேலைக்கு எடுக்கற அளவுக்கு...’

‘எப்படிங்க சொல்லமுடியும்? சின்ன கம்பெனி கூட இப்பெல்லாம் வங்கிக் கடன் வாங்கி, பெரிய ப்ராஜெக்ட் போடறாங்க. தாஸ் மாதிரி ஆளை, பங்குதாரராகக்கூட சேத்துக்கலாம். ரெண்டு எல். ஸி. எம். எஸ் என்ற கருவிகளும், மாதிரிகளை பாதுகாக்கும் ஃப்ரீஸர்களும், ரெண்டு பெட்ரூம் ஃப்ளாட் இடமும் போதும். வெளிநாடுகளிலேர்ந்து ஒப்பந்தம் வாங்கித்தர ஏஜெண்ட்டுகள் இருக்கிறார்கள். இப்போ தைக்கு சீனாவை விட நம்ம நாட்டு ஆராய்ச்சி

யின் விலை குறைவு. அவன் என்னிக்கு குறைக் கறானோ, அன்னிலேர்ந்து இவங்க கடையை மூட வேண்டியதுதான்.'

ராஜீவ் மௌனித்தார். அவர் அறிந்த அளவில் அவன் சொல்வது உண்மை. இப்போ கான்ட் ராக்ட் ஆராய்ச்சி என்பது, 90களின் கம்யூட்டர் மாதிரி. புதுக்கம்பெனிகள் எண்ணிக்கை புற்றீ சல்கள்... தாஸ் வெளியே பறந்திருக்கக் கூடும்.

'மராட்டே. எல்லா பன்னாட்டு விமான நிலையங் களிலேயும் அலெர்ட் பண்ணுங்க. நேத்து, முந் தாநாள் போன பயணிகள் பட்டியல்ல தாஸின் பாஸ்போர்ட் நம்பர் தேடுங்க. நேபாள், வடகி ழக்கு எல்லை மாநிலங்கள் எல்லாத்துலேயும் அலெர்ட் பண்ணணும்.' ராஜீவின் கட்டளைகள் அடுக்கடுக்காய் பறந்தன. ஃபோன்கள் அலறின. செல்நம்பர்கள் கண்காணிப்பில் வைக்கப்பட் டன. ராஜீவும், மராட்டேயும் குவாலிஸில் கிளம்பி எங்கோ விரைய, அபிஜீத் திகைத்து நின்றான். சே, என்ன ஒரு விடியல் இரண்டு நாளாய்...?

வினயாவைப் பார்த்து பேசிவிட்டு, இரவு பத்து மணிக்கு வீட்டுக்கு வந்த அபி, கூரியரில் வந்த கடிதத்தைப் படித்து கவனமாய் வைத்தான். வீட்டு லோன்... இரண்டுமாதமாய் கட்டவில்லை. எச்சரிக்கை கடிதம்... வினயாவிடம் கேட்க வெட்கமாயிருக்கிறது. தலை பாறாங்கல்லாய் கனத்தது. இன்னும் பல அரசு நிறுவனங்களிலி ருந்து பணம் வரவில்லை. பொருள் கொடுத்த கம்பெனிகள் இறுக்குகின்றன.

பொய் சொல்லிச் சமாளிப்பது தெரியாது, பர்ச் சேஸ் அதிகாரிகளைச் சமாளிப்பது தெரியாமல் நடுவில் மாட்டிக்கொண்டு விழிப்பதை அப்போ துதான் உணர்ந்தான். இன்னும் இரு நாட்களில் இருபதாயிரம் ரூபாய் வரவேண்டும். இல்லாவிட் டால் மானம் போகும்.

இதன் நடுவே இந்த பயோக்ரோம் நிகழ்வு. ஒரு விதத்திலும் தொடர்பில்லாத நான் ஒவ் வொருநாளும் போலீஸ் ஸ்டேஷனில் அந்த மராட்டேயைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதோடு அந்த இறுகின மூஞ்சி போலீஸ் அதி காரி ராஜீவ்...

வினயா காத்திருந்து வெறுத்துப் போய் என்னை விட்டுப்போய் விடுவாளோ? சிந்தனையே கதிக லங்க அடித்தது அவனை.

கனத்த மனத்துடன், படுக்கையில் சாய்ந்தவன், சட்டென உறங்கிப் போனான்.

மராட்டே அறையை விட்டுப் போனதும், ராஜீவ் தனது பையிலிருந்த மற்றொரு ஃபோனை வெளியே எடுத்தார். நீளமாக கனமாக இருந்தது அது. சரியாக 8.49 மணிக்கு அதனை உயிர்ப் பித்து ஒரு நிமிடம் காத்திருந்தார்.

'டெல்லி காலிங்' என்று அதில் கரகரத்து பின் தெளிவான குரல் கேட்டது. அரைமணி நேரம் அந்த உரையாடல் தொடர்ந்தது.

'ராஜீவ், ஸ்டேட் ஃபோரன்ஸிக் துறையை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வேண்டுமென்

றால் லோக்கல் போலீஸை அதிகம் செயல்பட வைக்கலாமா?'

'வேண்டாம்' என்றார் ராஜீவ். 'இது சற்று நுணுக்கமானது. நான் பார்த்துக் கொள்கிறேன். லோக்கல் போலீஸ் தலைமை இதில் நுழையாத வகையில் இன்னும் காப்பு தேவை. அவர்கள் அறியாத வகையிலேயே நகர்த்த வேண்டும். இண்டெர்போல்க்கு அலெர்ட் செய்துவிடுங் கள்.'

'ரோஜர்' என்றது மறுமுனை.

நள்ளிரவு அலறியது மராட்டே 'சார், சுனந் தாவுக்கு லேசாக நினைவு வந்திருக்கிறது. இன்னும் பேசத் தொடங்கவில்லை.' என்றார் மறுமுனையில்.

'காவலை பலப்படுத்துங்க. ஆஸ்பத்திரியில பாதுகாப்பு சிக்கல்னா, வேற பாதுகாப்பான இடத்துக்கு, கொண்டுபோணும். ராத்திரியே போயிடலாம்' மடமடவென உத்தரவு பிறப்பித்த ராஜீவ் அப்போதே மருத்துவமனைக்குக் கிளம்பினார்.

# அத்தியாயம் 9

‘தாஸோட இடத்துல டாக்டர் ரங்கனை நியமித்திருக்கிறோம்.’ மேத்தா சொல்லிக் கொண்டிருக்க, டாக்டர் ரங்கன், சினேகமாய்ப் புன்னகைத்தார்.

‘டேட்டா எல்லாம் இருக்கா டாக்டர் ரங்கன்?’

‘எல்லாம் இருக்கே? லாப் சர்வரில் எல்லா டேட் டாவும் இன்னிக்கு வரை அப்டேட்டா இருக்கு.’

எப்படி சாத்தியம்? ராஜீவ் வியந்தார். லாப் கம்ப்யூட்டரில் தாஸ் டேட்டா வைக்கவில்லை என்றும், லேப்டாப்பில் மட்டும் வைத்திருப்ப தாகவுமல்லவா அந்த அபிஜீத் சொன்னான்? ‘தாஸின் லேப்டாப் இப்போது எங்கே, டாக்டர் மேத்தா?’

‘அப்படியே அவர் கேபின்ல வைச்சிருக்கோம். அதான் உங்க ஆட்கள் அதைத் தொடவேண் டாம்னு டாங்களே?’

‘இந்த லேப்டாப்பைத்தான் அன்னிக்கு பார்த் தியா?’ என்றார் ராஜீவ். அபிஜீத் கவனமாக அதனைப் புரட்டிப் பார்த்தான். ‘இது மாதிரிதான் இருந்தது.’

‘அந்த கருவிகளின் டேட்டா கோப்புகளை இதிலே காட்டு. யாருப்பா ஐ. டி மேனேஜர்? இது னோட பாஸ்வேர்ட் கொடுங்க.’

அபி அந்த லேப்டாப்பினுள் புகுந்தான். சில நிமிடங்களுக்குப் பின் ‘இதுதான் அவரோட வழக்கமான டேட்டா, பாருங்க’ என்றான்.

ராஜீவ் எட்டிப்பார்த்தார். சுத்தமாப் புரியலை. என்னவோ கச்சாமுச்சாவென்று. ஆர்கானிக் கெமிஸ்ட்ரி வடிவங்கள்... அதனை அடுத்து ஊசி ஊசியாக சில கிராஃப்கள். ‘இது மாஸ் ஸ்பெக்ட்ரம் பொருண்மை நிறமாலை சார். அது பக்கத்துல இருக்கிற கெமிக்கல் வடிவங்கள், இந்த மாஸ் இருக்கிற கெமிக்கல் இந்த வடிவம் கொண்டிருக்குன்னு காட்டுது.’

இந்தப்படங்கள் என்ன சொல்கின்றன? தாஸ் என்ன செய்து கொண்டிருந்தார்?

கிளம்பும்போது, அபிஜீத் அருகே வந்து ‘சார்’ என்றான் சன்னமாக. ‘அந்த லேப்டாப் தாஸோ டதுதான். ஆனா, ஹார்ட் டிஸ்க் அவரோட தில்லே.’

ராஜீவ் சட்டெனெ நிமிர்ந்தார்.

‘அவரோட கம்ப்யூட்டர் புதியதுன்னு அவரே சொன்னார். ஆனா, லேப்டாப்போட அடிப்பக் கத்துல, அவசரமாக திருகாணிகள் கழட்டப் பட்டிருப்பதோட அடையாளமா கீறல் இருந்தது. வாரண்ட்டி ஸ்டிக்கர் கிழிபட்டிருந்தது.’

‘ம்ம்...’ யோசித்தார். ‘கம்பெனிக்காரங்களே ரிப்

பேர் செய்திருக்கலாம்... இதுக்கு முன்னாலே.'

'லேப்டாப் கம்பெனி சர்வீஸ் பிரிவுல கேட்டுப் பாத்துடலாம். இது வேற ஹார்ட் டிஸ்க்காத்தான் இருக்கணும். அதுல இருக்கிற கோப்புகளோட தேதி பார்த்தேன். பலதும் அவர் காணாமல் போன நாளுக்கு முந்தியநாள் உண்டாக்கியது.'

பயல் பரவாயில்லையே... வியந்தார் ராஜீவ் மன துள். 'வெரிகுட் அப்சர்வேஷன்'

'சார், தாஸ் கடத்தப்படலை. அவர் முக்கியமான டேட்டாவோட வெளியேறியிருக்கா.ர்'

'அவர் கடத்தப்பட்டார்னு உனக்கு யார் சொன் னது?'

அபிஜீத் திணறினான் 'நான் ஊகிச்சேன் சார்'

'லுக். அபிஜீத். உன் ஊகத்தையெல்லாம் உன்னோட வைச்சுக்க. இது ஒரு இன்டஸ்ட்ரி எஸ்பியனேஜ். நிறுவனங்களுக்குள் நடக்கும் ஒரு பேராசைப் போட்டி. தாஸ் என்ன செய்தார் என்பது எனக்கு முக்கியமல்ல. அவர் இப்போ எங்கே? என்பதுதான் கேள்வி. இந்த மூலக்கூறு, வெண்டைக்காய் எல்லாம் அந்தந்த நிறுவனங் கள் அடித்துக்கொள்ள வேண்டிய பிரச்சனை. புரியுதா?'

'சாரி சார்' என்றான் அபிஜீத் முகம் சிறுத் தவனாய். அவன் கிளம்பியதும், தில்லியில் யாரையோ அழைத்தார். ஒரு லேப்டாப் சோதனை செய்யணும்.'

# அத்தியாயம் 10

டாக்கா விமான நிலையத்தின் ஏ 2 முனை யத்திலிருந்து மலேசியா ஏர்லைன் விமானம் மெல்ல பின்னால் வந்து, ஓடு பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க, பயணிகளில் ஒருவன் அருகிலிருந்தவனிடம் கிசுகிசுத்தான்.

'நல்லவேளை, ஹார்ட்டிஸ்க்கை துரிதமாக மாற்றிவிட்டாய். பயோக்ரோம் மோப்பம் பிடித் துவிட்டது. ஒரு நாள் தாமதித்திருந்தால்கூட, லேப்டாப்பை சோதனை போட்டிருப்பார்கள்.'

'தெரிந்துதான் உன்னை உடனே கடத்திய துபோல காண்பித்திருக்கிறோம். போலீஸில் புகார் பதிவு செய்திருக்கிறார்கள். உன்னைக் காணவில்லையென்று.'

'நீ வர தாமதமானதும், கலவரப்பட்டு அபிஜித் என்ற ஒருவனிடம் யூ எஸ்பியை கொடுத்துவிட் டேன். அடிக்கடி லாப் வந்து போவதால் அவன் மீது சந்தேகம் வராது. அவனை அப்புறமாக அடித்து எடுத்துக்கலாம்னு ப்ளான் வச்சி ருந்தேன். இப்ப எப்படி எடுக்கறது?' தாஸின் கையில் பங்களாதேஷ் பாஸ்போர்ட் ஒன்று புதி தாக பளபளத்தது.

‘கவலைப்படாதே. அவனை புரட்டியாகிவிட்டது... மலேசியாவுல உன் கையில கிடைச்சிரும்.’

கோலாலம்பூர் விமான நிலையத்தில் மெட்ரோ பிடித்து சென்ட்ரல் ஸ்டேஷன் வந்த அவர்கள், அங்கிருந்த பிரபல ஓட்டல் ஒன்றில் அறை எடுத்தனர். அன்வர் ரஹ்மான், மாஹீர் கான் என்ற அவ்விருவரும் ஒரு மணி நேரத்தின் பின் லிஃப்ட்டை உபயோகிக்காமல், மாடிப்படிகளில் ஓசையெழுப்பாமல் இறங்கிக் காத்திருக்க, இரு நிமிடங்களில் அங்கு வந்த வெள்ளை நிற புரோட்டான் காரில் ஏறி நகர நெரிசலில் காணாமல் போயினர்.

ராஜீவின் ஃபோன் சிணுங்கியது. ‘கே எல் காலிங்.’ அவர் மௌனமாகக் காத்திருக்க, மற்றொரு இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. தில்லி, சில முக்கியமான அழைப்புகளை, விசேஷமாக வைக்கப்பட்டிருக்கும் இணைப்புகளில் பாதுகாப்பாக அனுப்பும். இரு மாதங்களாக மலேசிய உளவுத்துறையுடன் ராஜீவ் செய்துவரும் உரையாடல்.

‘சஸ்பெக்ட் ஆன் த மூவ். பி.ஜே (PJ) வந்திருக்கிறான். பெதாலிங் ஜெயாவில் யாரையாவது சந்தேகிக்கிறீர்களா?’ இருபது நொடிகளின் பின் ராஜீவுக்கு அது கேட்க, அவர் ‘இல்லை’ என்றார். அவரது பேச்சு தில்லியில் என்க்ரைப்ட் செய்யப்பட்டு, கோலாலம்பூரில் ஒரு கடவிச் சொல் மூலம் இணைப்பு ஏற்படுத்தப்பட்ட ஃபோனில், விரிவாக்கப்பட்டு மறுமுனையில்

கேட்டது. இருமுனை பேச்சு பாதுகாப்புடன்தான் செல்லும்.

‘சஸ்பெக்ட் முன்பே பயோபைரஸியில் ஜெயிலுக்குப் போனவன். அரியவகை பாம் மர விதைகள், பூச் செடிகளின் விதைகளை இங்கிருந்து கடத்த முயன்று பிடிபட்டவன். மலேசியப் பிரஜை. இதுவரை அவன்மீது வேறு குற்றப்பதிவு இல்லை. புதிய குற்றத்திற்கான, சந்தேகத்திற்கான வாரண்ட் எதுவும் அவன் மீது லோக்கல் போலிஸ் சுமத்தவில்லை. கைது செய்ய முடியாது. விசாரிக்க விரும்புகிறீர்களா?’

‘வேண்டாம். அவனை பின்தொடருங்கள். யாரை பார்க்கிறான் என்பது தெரியவந்தால் போதுமானது. அதன்பின் சொல்கிறேன்.’

பெதாலிங் ஜெயாவில், ஒரு பெயிண்டு குடோவுன் அருகே தனது க்ராண்ட் விட்டாராவில் காத்திருந்தான் அவன். வெள்ளை புரோட்டான் கார் ஒன்று அவனை நெருங்குகையில் விளக்கை சிமிட்டியது. காரிலிருந்து இறங்கியவன் அவனது கைகுலுக்கி, ஒரு ப்ளாஸ்டிக் உறையை நீட்ட, அவன், பதிலுக்கு சிறியதாய் ஒரு பொருளை நீட்டிய கையில் வைத்தான்.

குடோவுனின் முதல் மாடியிலிருந்து டெலிபோட்டோ லென்ஸ் மூலம் ஃபோட்டோ எடுத்தவன், உடனே செல்ஃபோனை இணைத்து ஃபோட்டோவை அனுப்பினான். தனது மொபைலில் அதனை தர விறக்கிய ராஜீவ் , அந்த ஆட்களைக் கவனித்தார். அமெரிக்கடாலர்

நிறைந்த ப்ளாஸ்ட்டிக் பையைக் கொடுத்து, சிறு பொருளைப் பெற்றவனை புன்னகையுடன் கவனித்தார்.

'தாஸ்' என்றார் தனக்குள் மெல்ல. 'யூ.எஸ்.பி கிடைத்துவிட்டது. உனது அடுத்த இயக்கம் என்ன?'

ஹிண்டுஜா மருத்துவமனையிலிருந்து அதி காலை மூன்று மணிக்கு ஆம்புலன்ஸ் ஒன்று வெளியேறி, போரி வல்லி என்ற புறநகர்ப் பகுதியில் கடற்கரைப் பாதையில் ஒதுக்குப் புறமான ஒரு தனி வீட்டின் வாசலில் நின்றது. வீட்டின் முன்புறமும் பின்புறமும் சீருடையின்றி போலீஸ்க்காரர்கள் காவலில் நின்றனர்.

'ரொம்ப வீக்கா இருக்காங்க. பேச்சு இன்னும் வரலை.' என்றார் செவிலி ஹரிதா... 'நாமபே சினா புரியுது. கையில மெல்ல சைகை காட்ட றாங்க. உங்களைக் கூப்பிடறாங்க'

ராஜீவ் சுனந்தாவின் அருகே குனிந்தார். சுனந் தாவின் விரல்கள் நடுங்கின.

'தாஸ் என்ன செய்துகொண்டிருந்தார்? அவர் ஆராய்ச்சிபத்தி உங்களுக்கு என்ன தெரியும்?'

சுனந்தாவின் உதடுகள் மூடித்திறந்தன.

'பேப்பர்... பேப்பர் வேணும்கறாங்க' என்றார் செவிலி ஹரிதா.

வலதுகையின் அடியில் பேப்பர் ஒன்றை வைத்து ஸ்கெட்ச் பேனா ஒன்றை அவர் விரல் களில் வைத்தார் ராஜீவ். அழுத்தம் கொடுத்து

எழுத முடியாது. எனவே பென்ஸில், பால் பாயிண்ட் பேனா சாத்தியமில்லை.

கோணலாக பல புள்ளிகளை வரிசையாக வைத்தார் சுனந்தா. கிட்டத் தட்ட புள்ளிகள் கோணலான ஒரு செவ்வகத்தில் வந்தன. அவர் வரைந்ததை அவர் முகத்திற்கு நேராகக்காட்ட, மிகுந்த ஆயாசத்துடன், அதில் ஒரு யூ போன்ற வடிவை வரைந்தார். பின் பேனா நழுவ, அவர் கண்களை மூடினார்.

‘ஓய்வுவேண்டும் அவருக்கு’ என்றார் ஹரிதா சற்றே கோபத்துடன். இவன்களுக்கு வேண் டுமென்றால் ஒரு நோயாளியை எப்படி பிய்த்து எடுக்கிறார்கள்?

ராஜீவ் அந்தக்காகிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். செவ்வகத்தில் வரிசையாக புள்ளிகள். ஏதோ கோலம் போடுவதைப்போல. அதனுள் இதென்ன கோணலாக ஆங்கில யூ? என்ன பொருள்?

# அத்தியாயம் 11

கார், கேளல் விமான நிலையம் நோக்கி விரையும்போது, முன்னே இருந்தவன் திரும்பிப் பார்த்து ‘தாஸ், பாஸ்போர்ட் பத்திரம். இப்ப நீ ரஹ்மான். தாஸ்னு கூப்பிட்டா திரும்பிடாதே’ என்றான். வலுக்கட்டாயமாக தாஸ் சிரித்தார். மில்லியன் டாலர் வேணுமென்றால் எவன் எவனோ நீ வா போன்னு பேசுவதை யெல்லாம் சகித்துத்தான் ஆகவேண்டும்.

‘ரியோ எப்ப போய்ச்சேருவோம்?’

‘முதல்ல மணிலா. அப்புறம் மெல்போர்ன். அங் கேயிருந்து ஏழு மணி நேரம்.’

‘ஆட்கள் வருவாங்க இல்ல? ரியோ போன தில்லே நான் இதுவரை. கார்னிவெல் நேரத்துல போகாம என்னப்பா இது?’ மெல்லச் சிரித் தார்கள்... தாஸ் தனது காலின் அடியிலிருந்த பையில் செல்ஃபோன் அடிப்பதைக் கேட்டு குனிந்தார்.

புரோட்டான் காரில் முன்னால் இருந்தவனும், தாஸின் அருகே இருந்தவனும், பின்னேயி ருந்து வந்த கிராண்ட் விட்டாராவிலிருந்து நீண்ட துப்பாக்கியின் முனையைக் கவனிக்க

வில்லை. இரு நிமிடங்களில், புரோட்டானின் டிரைவருடன் தாஸ் கிராண்ட் விட்டாராவில் ஏறிக்கொண்டார்.

மஞ்சள் மற்றும் மிளகாய் ஏற்றுமதிக்கான தர நிர்ணய பிராந்திய ஆய்வகத்தை இந்திய ஸ்பைஸஸ் போர்டு முதன் முதலாக மும்பை யில் 2008ல் நிறுவியது. அதன் பின் குண்ட்டூர், சென்னை, தில்லி, தூத்துக்குடியில் 2013ல் என ஆய்வகங்கள் வளர்ந்தன.

மஞ்சள் மற்றும் மிளகாயில், தோற்றம், நிறம், அமிலத் தன்மை, நுண்ணுயிரித் தாக்குதல், மிளகாயில் காங்கோரெட் போன்ற அடிப்படைத் தேவையான சோதனைகள் மட்டுமே அங்கு செய்யப்படுகின்றன. அவை ஏற்றுமதிக்கு சான் றிதழ் வாங்கப் போது மானவை.

கொச்சியில் இருக்கும் தலைமை ஆய்வகத்தில் மிக நவீனக் கருவிகள் இருக்கின்றன. பிராந்திய ஆய்வக அறிக்கையில் எதாவது குழப்பங்கள் இருந்தால் கொச்சியில் சோதனை செய்யப்ப டும். அதன் தீர்ப்பு இறுதியானது. என்னதான் நவீனமாக ஆய்வகங்கள் இருப்பினும், மஞ்சள் பற்றி அடிப்படை ஆய்வு எதிலும் நடத்தப்பட வில்லை என்பது கசப்பான உண்மை. மஞ்சள் என்றல்ல, இஞ்சி, மிளகாய் என்பதிலும் அடிப்படையான ஆய்வுகளை மேற்கொள்ள அந்த ஆய்வகங்களிடம் தரநிர்ணயத்திற்காகக் கொடுக்கப்பட்ட தொகையில் இன்னும் 50% கூடுதலாக முதலீடு செய்திருந்தால் போதுமா னது.

மும்பை அன்று முப்பத்தைந்து டிகிரி சென்டிகிரேடில் கொதித்தது. வறண்டுஎரிந்தது. பிராந்தியஆய்வகத்தில் 'டாக்டர் கோக்லே மீட்டிங்ல இருக்கார். கொஞ்சம் காத்திருக்க ணும்.' 'சொன்ன வரவேற்பறைப்பெண் மிகப் பெரிதாகப் பொட்டு வைத்திருந்தாள். 'காய் ரே, ...' எவனோடோ ஃபோனில் கதையடிக்கத் தொடங்கினாள்..

அபிஜீத் நாற்காலியில் கடுப்போடு அமர்ந்தான். அரசாங்க ஆய்வுக்கூடம் என்றாலே, இப்படி விட்டேத்தியாகத்தான் இருக்க வேண்டுமா?

அபிஜீத் எழுந்துகொண்டான். இன்னும் அரைமணிநேரம் காத்திருக்க வேண்டும்... பழைய கம்பெனி வேலையென்றால், இன் னோரம், அடையாள அட்டையைக் கொடுத் துவிட்டு போய்க்கொண்டே இருந்திருப்பேன்... இப்போ...?

வெறுப்பில், டீப்பாய் மேல் கிடந்த பத்திரிகைக ளைப் புரட்டினான். நாலு மாதம் முன்னே புனே யில் நடந்த 'இயற்கை வேதியியல் ஆய்வுகள் குறித்த கருத்தரங்கு' பற்றிய புல்லட்டின். அசிரத் தையாகப் புரட்டியவன், சட்டென நிமிர்ந்தான்.

'மஞ்சள் கிழங்கின் ஆன்ட்டி கேன்ஸர் தன்மை குறித்த மூலக்கூறு ஆய்வு' பற்றிய சொற்பொழி வில், முதல் வரிசையில், டாக்டர் தாஸ்...

# அத்தியாயம் 12

பரபரப்புடன் பர்ச்சேஸ் டிப்பார்ட்மெண்ட்டில் நுழைந்தான். ‘கோக்லே இன்னும் மீட்டிங்ல இருக்காரே... அதிருக்கட்டும்... என்னப்பா, நீ? போனதடவை ஆர்டர் வாங்கும்போது, ம்யூசிகல் கீ போர்ட் கேட்டேன்ல... இன்னும் வந்து சேரல. பையனுக்கு அடுத்த மாசம் பர்த்டே.’ பர்ச்சேஸ் மேனேஜர் ஜாதவ் ஆரம்பிக்க, அபிஜீத் வழிந் தான். எத்தனை முறை இவரிடமிருந்து தப்பிக்க முடியும்? நான் லஞ்சம் கேட்கவும் மாட்டேன் கொடுக்கவும் மாட்டேன். ஆனால்...

‘இங்கே வரணும்னு இல்ல. பூனால, என் மச்சி னன் வீடு ஸ்டேஷன் பக்கத்திலே...’

கோக்லே மீட்டிங்கிலிருந்து வெளிவந்ததும், அவசரமாக அவர் அறைப்பக்கம் ஒதுங்கினான்.

‘மஞ்சள் கிழங்கு ஒரு இயற்கை அற்புதம். அதன், ஆன்ட்டி பயாட்டிக் தன்மை நம் பாட்டிக்குப் பாட்டிக்கும் தெரியும். ஆன்ட்டி கேன்ஸர் பண் புகள் கொண்ட அதன் சில மூலக்கூறுகளை பத்தித்தான் என்னோட அந்த லெக்சர்.’ பெரு மையாகச் சொல்லிக் கொண்டிருந்தார் டாக்டர் கோக்லே.

‘குர்குமின் பத்தியா? ஆளாளுக்கு அதுல ரிசர்ச் பண்றாங்களே?’

‘குர்குமின் பத்தி நிறையவே ஆய்வு வந்தாச்சு. தோல் புற்றுநோய் லேர்ந்து, டயாபடீஸ், குடல் புண், வாய்ப்புண், உடல் வலி குறைப்பு, மறதி நோய் வரை எல்லாத்துக்கும் அது குணம் கொடுக்கும். ஆனா அது பெருமளவுல உடம்புல சேர்ந்தாத்தான் பயன் இருக்கு. நாம் எடுத்துக் கொண்டாலும், குர்குமின் உடல்ல சேருமளவு மிகக் குறைவு. கிட்டத்தட்ட 300 மில்லி கிராம் ஒரு நாளைக்கு குர்குமின் எக்ஸ்ட்ராக்ட் மட்டும் சேரணும். அதுக்கு மஞ்சளை கிலோக்கணக் குல நாம திங்க முடியுமா? பழக்கமா ரெகுலரா மஞ்சள் சேர்த்துகிட்டா பயன் இருக்கும். ஸோ, குர்குமின் தவிர மஞ்சள்ல வேற என்ன பயன்த ரும் மூலக்கூறு இருக்குன்னு பாக்கறோம்.’

‘நீங்க இருக்கறது தர நிர்ணயப் பிரிவு. அதுல இருந்து எப்படி ஆராய்ச்சி செஞ்சீங்க?’

கடகடவென சிரித்தார் கோக்லே ‘ஒரு கிறுக் குத்தனமான ஆர்வம்தான். விதம் விதமான மஞ்சள் கிழங்குகள் வரும். அதுல கொஞ்சம் எடுத்து வைச்சிருக்கேன். ஒரு வருஷம் முந்தி ரெண்டு ஆய்வுக் கட்டுரை படிச்சேன். கிழங்கு களை கொச்சியில இருக்கிற எல். ஸி. எம். எஸ் மெஷின்ல ஆராய்ச்சி செஞ்சேன். ஒரு கட்டுரை வெளியிட்டோம். அதுலதான் முதல்முதலா டர்மரின்னு ஒரு மூலக்கூறு மஞ்சள் கிழங்குல இருக்கறதைப் பாத்தோம்.’

‘டர்மரின்?’ என்றான் சிந்தனைவயப்பட்டு. இது வரை கேட்டதில்லை.

‘சில மூலக்கூறுகள் எளிதில் நம் உடலில் சேர்ந் துவிடுவதில்லை. எக்கச்சக்கமாக உண்ண வேண்டியிருக்கும். குர்குமின் மூலக்கூறையே எடுத்துக்கோ. அது ஒரு கிராம் சேரணும்னா, நாம நூறு கிராம் குர்குமின் எடுத்துக்கணும். ஒரு உதாரணத்துக்கு சொன்னேன்’

‘அதுக்கும் டர்மரின் க்கும் என்ன தொடர்பு? இது, குர்குமின் வேலையைச் செய்யுமோ?’

‘இல்லே’ சிரித்தார் கோக்லே ‘டர்மரின் இருக் கறபோது, ரத்தத்துல குர்குமின் அதிகமாகச் சேரும். ஆனா, அதுக்கு நிலைத்தன்மை ரொம்ப குறைவு. சட்டுனு இன்னொரு மூலக் கூறாக மாறிடும். அந்த கட்டுரையை பாத்துட்டு இயற்கை வேதியியல் கருத்தரங்குல கலந்துக்க வாய்ப்பு வந்தது. அதுல...’

அபிஜீத் இடைவெட்டினான் ‘மன்னிக்கவும் டாக் டர். அதுக்கும் பயோக்ரோம் லாப்க்கும் என்ன தொடர்பு?’

‘என்ன கம்பெனி? பயோக்ரோம்? ஒரு தொடர் பும் இல்லை. இது முழுக்க முழுக்க அரசாங்கம் தந்த ப்ராஜெக்ட். மஞ்சள் பத்தி 1997லேயே நமது சி. எஸ். ஐ. ஆர் பாதுகாப்புரிமை வாங்கி யாச்சு. ஒரு பயலும் அனுமதியில்லாம ஒண்ணும் செய்யமுடியாது’

‘அப்போ, டாக்டர் தாஸ் எதுக்கு உங்களோட

செமினாருக்கு வந்திருந்தார்?'

'ஓ. டாக்டர் தாஸ்! சரியான கிறுக்கன். என்னோட ஆராய்ச்சிக்கு 'பணம் தர்றேன்... டர்மரின் என்ற மூலக்கூறை எப்படி தனித்துப் பிரிச்செடுக்கறது ங்கற மெத்தட் மட்டும் கொடுத்துடு'ன்னு பல முறை கேட்டான். நான் முடியாது ன்னுட்டேன்.'

'நீங்க கண்டெடுத்த டர்மரின் ல அப்படி என்ன இருக்கு?'

'தெரியாது... வேற மூலக்கூறுகளோட சேர்த்து சிந்த்தஸிஸ் பண்ணினா, வேற பெரிய நிலை யான மூலக்கூறு கிடைக்கலாம்... பெரிய மூலக்கூறு டர்மரினை உடம்புல சரியாகச் சேர்த்து மருத்துவ பயனளிக்கலாம். அதுக் கெல்லாம் பணம் வேணும். கருவிகள் வேணும். அரசு அனுமதி வேணும். மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களோட தொடர்பு தேவை. எனது துறையிலேயே இந்த ஆராய்ச்சி இருக்காது.' கோக்லே பெருமூச்செறிந்தார்.

'நான் ரிடயர் ஆகும்வரை அதெல்லாம் நடக்கப் போவதில்லை. என் ஆய்வு பத்தி ரெஃபரன்ஸ் கொடுத்து எவனோ, அஞ்சு வருஷம் கழிச்சு டாக்டரேட் வாங்கிப்போவான்.'

அபிஜீத்திற்கு மனம் கனத்தது. ஆய்வுகளின் அவல நிலை இதுதான். அடிப்படை அறிவிய லிலும் அரசியல் உண்டு, அதிகார எல்லைகள் கட்டிப்போடுவதுண்டு. குழு மனப்பாங்கு தலை விரித்தாடுவதுண்டு. இந்தியா என்றல்ல, உலக அளவிலும் இது நிதர்சனம்.

மாலையில் ராஜீவைச் சந்திக்க, ஆர்க்கிட் ஹோட்டல் விரைந்தான். அவரிடம் விவரமாக எடுத்துச் சொன்னான். 'டர்மரின் பத்தி மேல திகத் தகவல் என்கிட்ட இல்லை. வேணும்னா டாக்டர் கோக்லேயை...'

'கொச்சி ஆய்வகத்திலும், சி.எஸ்.ஐ.ஆர் தலை மையகத்திலும் இதன் விவரம் இருக்கும். அரசு செய்யும் எந்த ஆய்வின் விவரமும் ஒரு டேட் டாபேஸில் இருக்கும். நான் தேடறேன். நன்றி அபிஜீத்' என்றார் ராஜீவ். வேறு மாதிரியாக கேஸ் திரும்புகிறது...

ராஜீவ் ஏதோ மும்முரமாக எழுதிக் கொண்டிருக் கும்போது ஃபோன் சிணுங்கியது. 'சார், சிஸ்டர் ஹரிதா. பேஷண்ட் கொஞ்சநேரம் முன்பு பேப்பர் கேட்டாங்க. என்னமோ சிரமப்பட்டு கிறுக்கினாங்க. அப்புறம் திரும்பவும் நினைவு போயிருச்சு.'

'என்ன எழுதினாங்க?'

'அங்... டர்... டர்மரின். அப்புறம் ஒரு நம்பர். 384... டர்மரின் 384.'

# அத்தியாயம் 13

‘ஒன்று தெளிவாகக் கூறிவிடுகிறேன். பயோக்ரோம் நேர்மையான வழிகளில் மட்டுமே ஆராய்ச்சி செய்கிறது. எங்களுக்கும் எந்த டர்மரின் மூலக்கூறு பற்றிய ப்ராஜெக்ட்டுக்கும் சம்பந்தமில்லை’ டாக்டர் மேத்தாவின் குரல் உறுதியாக இருந்தது. சற்றே கோபமும் தெறித்து.

‘எங்கள் ப்ராஜெக்ட்கள் எல்லாமே அமெரிக்க எஃப்.டி.ஏ (US FDA) விதிமுறைகளுக்கும், அவர் களின் தணிக்கைக்கும் உட்பட்டது. எதாவது விதிமுறைகளுக்கு மீறிய ஆய்வுகளைச் செய் தால், அனுமதி பறிபோய்விடும். பில்லியன் டாலர் பிஸினஸ். ராஜீவ். புரிந்துகொள்ளுங்கள். ஒரு டர்மரின் மாலிக்யூல் கொண்டு எங்கள் எதிர்கா லத்தை பணயம் வைக்கமாட்டோம்.’

‘சரி. டாக்டர் தாஸ் மேல் உங்கள் தணிக்கைக் குழு கொண்டு வந்த குற்றச்சாட்டு என்ன?’

‘எப்போ?’

‘ஒன்றரை வருஷம் முன்னாடி. சுனந்தா எழுதின இமெயிலுக்கு உங்க கமிட்டி என்னபதில் கொடுத்துச்சு?’

ஆடிப்போனார் மேத்தா. இது உள்ளுக்குள் மட்டுமே தெரிந்த விஷயம். சுனந்தா ஒரு மின்னஞ்சல் எழுதியதற்கு, தாஸ் பெரிய விஞ்ஞானி என்பதால் அவர்மீது இது ஒரு பொறாமைக் குற்றச்சாட்டு என்ற அளவில் அனைவரும் பதிலளித்திருந்தனர். இது எப்படி இந்த கிராகதனுக்குத் தெரிந்தது?

'குற்றச்சாட்டு அல்ல. அது ஒரு அப்சர்வேஷன் மட்டுமே. அவர் ஆறு மாதம் முன்பு வாங்கிய கருவிகள் மதிப்பு ஒரு மில்லியன் டாலர். இதன் தேவை என்ன என்பதுதான் சுனந்தாவின் கேள்வி. அதற்கு நாங்கள் பதிலளித்துவிட்டோமே?'

ராஜீவ் பதிலேதும் சொல்லாமல் ஒரு புன்னகையுடன் கிளம்பினார்.

பர்ச்சேஸில்வினய் மதம்வார் அவரைப் பார்த்து பெரிதாக சிநேகமாகப் புன்னகைத்தான். 'என்ன சார் வேணும்?'

'மதம்வார், தாஸ் கொடுத்த எல்லா பர்ச்சேஸ் ஆர்டர்களின் காப்பி வேணும்.'

ஹோட்டல் ஆர்க்கிடில் ராஜீவின் அறையை அபிஜீத் தட்டியபோது, மாலை ஆறுமணியாகிவிட்டிருந்தது. அவரது கட்டிலில் பல காகிதங்கள் இறைந்து கிடந்தன. 'உட்கார்' என்று சைகை காட்டினார்.

'இந்த பர்ச்சேஸ் ஆர்டர்களை கவனி' அவர் நீட்டிய காகிதங்களை அபிஜீத் பொறுமையாகப்

படித்தான்.

‘இன்டரஸ்டிங்’ விசிலடித்தான்... ‘சார். இவர் வாங்கிய கருவிக்கும் இவர் செய்துகொண்டி ருந்த ஆய்வுக்கும் சம்பந்தமில்லை.’

புது தில்லியிலிருந்து கிளம்பிய ஏர் இந்தியா விமானம் கோலாலம்பூரில் இறங்கியபொழுது மாலை ஆறு ஆகிவிட்டிருந்தது. முதலில் இறங்கிய ஒருவரை இரு போலீஸ் ஜீப்புகள் பாதுகாக்க, குண்டுகள் துளைக்காத ஒரு கார் விரைந்து, உளவுத்துறையின் அலுவலகத்திற் குக் கொண்டு சென்றது.

‘கே.எல். ஏர்போர்ட்டிற்கு சற்று தொலைவில் இவனை பிடிச்சோம். ரெண்டுபேரை ரோட்டான் கார்ல கொன்னதை ஒப்புக்கொண்டிருக்கான். மலேசியப்பிரஜை.’ ஒருவர் சொல்லிக் கொண்டி ருக்க, தில்லியிலிருந்து வந்த ராஜீவின் மேலதி காரி கேட்டார் ‘தாஸ்? தாஸ் எங்கே?’

‘தப்பிவிட்டான். இவனோடு ஏர்ப்போர்ட் வரவில்லை. இவன்கிட்ட ஒரு ஹார்ட்டிஸ்க்கை கொடுத்திருக்கான்.’ பளபளத்த சிறு ஹார்ட் டிஸ்க் ஒன்றை அவர் நீட்டினார்... பல்லைக் கடித்தார் ராஜீவின் மேலதிகாரி. பணம் தப்ப விட்டிருக்கும், இல்லாவிட்டால்வெனிசுவேலா / பிரேசிலின் பெட்ரோலியம். மலேஷியாவுக்கும் எண்ணெய் வேண்டும். ஹார்ட்டிஸ்க்கை எடுத்தவாறே தில்லிக்கு சில ஆணைகள் பிறப்பித்தார். அதன் பின் மலேசிய அதிகாரி யைப் பார்த்துச் சொன்னார் ‘நான் இவனிடம்

கேள்விகள் கேட்க வேண்டியிருக்கும். நீங்கள் உடனிருக்கலாம்…'

# அத்தியாயம் 14

‘புரியற மாதிரி சொல்’ என்றார் ராஜீவ். கூர்மையாகக் கேட்க முயன்றார். இந்த கேஸ்ல கொஞ்சமாச்சும் முன்னேறவேண்டுமென்றால் இதன் அடிப்படை புதிரை அறியவேண்டும். அந்தப் புதிர் அறிவியல் வடிவாக இருக்கிறது. அரசு ஆய்வக விஞ்ஞானிகள் ‘என் பாஸ்கிட்ட பெர்மிஷன் வாங்கணும்’ என்று தட்டிக்கழிப்பார் கள். ராஜீவ் இதனை அனுபவ பூர்வமாக அறிந் திருந்தார். ஆதாயம் இல்லாவிட்டால், அடுத்த இன்கிரிமென்ட்டுக்கு உதவாவிட்டால், எதற்கு நன்றியற்ற வேலையைச் செய்யவேண்டுமென்ற எண்ணம். இவன் ஆர்வமுள்ளவன். ஆர்வம் என்பது பைத்தியக்காரத்தனமானது. வலிந்து உதவி செய்யும்.

‘கொஞ்சம் கடினம். சுருக்கமாகச் சொல்கிறேன். மாஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர்ல பல ரகம் உண்டு. பயோக்ரோம் ஆய்வுகளுக்கு இரண்டு வகை மிக முக்கியம். முதலாவது. ட்ரிபிள் க்வாட் ருபோல் (Triple Quadrupole) என்ற நான்கு உருளைகள் உள்ள கருவி. நான்கு மின்கடத்தி உருளைகளை பக்கத்துல சேர்த்துப் பிடிச்சா நடுவுல டயமண்ட் மாதிரி ஒரு துளை தெரியும்.

இந்த மின்கடத்திகள் மேல மாறிகிட்டே இருக்கிற மின்சாரத்தைப் பாய்ச்சி, நடுவே இருக்கிற துளையில அயனிகளைச் செலுத்துவாங்க. அயனிகளோட பொருண்மைக்கும், அதன் மேல் ஏறியிருக்கிற மின்சார சார்ஜுக்கும் இருக்கும் விகிதப்படி, அவை மின்புலத்தாலே கவரப்பட்டு, அங்குமிங்கும் ஆடி அலைஞ்சு இந்த உருளைகள் மீது பட்டு சிதறும். மாறுகிற மின்புலம் சரியா அமைஞ்சா, ஒரு நேரத்துல ஒரேயொரு அயனி மட்டும், எங்கயும் படாம வெளிய வரும். இப்படி வருகிற அயனியை, பிடிச்சு, எந்த மின்புலம் இருந்தா எந்த பொருண்மையும் சார்ஜும் இருக்கிற அயனி வெளிய வரும் என்கிற பட்டியல் போட்டு, உள்ள வந்தது எந்த மூலக்கூறுன்னு கண்டுபிடிப்பாங்க. முக்கியமா இந்த கருவியில, மூலக்கூறு முதல்லயே தெரிஞ்சா, அது எவ்வளவு இருக்கு என்பதையும், அதனோட எடையையும் காட்டும். இதுதான் அவரோட ஆய்வுக்கு வேண்டியது.'

'சரி. மேலே சொல்' புரிவது அவ்வளவு கடினமில்லை.

'இன்னொரு ரகம், அயான் ட்ராப் (ion trap) என்னும் வகைசேர்ந்தது. இதுல ரெண்டு கோன் வடிவுல இருக்கிற மின்கடத்திகளை ஒண்ணு மேல ஒண்ணு, நம்ம ஊர் கோயில்ல அடிக்கிற சிங்கி மாதிரி வச்சிருப்பாங்க. அதுக்கு மேலேயும் கீழேயும் துளை இருக்கும். அதுவழியா அயனிகளை செலுத்திட்டு, கோன்களுக்கு மாறிகிட்டே இருக்கிற மின்புலம் கொடுப்பாங்க. இந்த மின்பு

லத்துல அயனிகள் ஒரு வட்டப்பாதையில சுத்தும். மாறிகிட்டே வர்ற மின்புலத்துல ஒரேயொரு அயனி மட்டும் வட்டப்பாதையிலேர்ந்து விலகி வெளிய வரும். எந்த பொருண்மையும் சார்ஜும் உள்ள அயனி, எந்த மின்புலம்னு ஒரு பட்டியல் வச்சு, உள்ளவந்த, தெரியாத மூலக்கூற்றின் வடிவம், அதனோட எடை இதையெல்லாம் கண்டுபிடிக்கலாம்... இது பெரும்பாலும், புதுசா தயாரிச்சிருக்கிற, தெரியாத மூலக்கூறின் வடிவம் பற்றி தெரிந்துகொள்ள உதவும். அடிப்படை ஆய்வுக்கு உதவும். இதைத்தான் தாஸ் இப்போ வாங்கியிருக்கார்.'

'ம்ம்... கொஞ்சம் புரியுது. அதாவது, அவரோட ஆய்வுக்குத் தேவையானதை வாங்காம, புதுசா மூலக்கூறு கண்டுபிடிக்க கருவி வாங்கியிருக்கார்னு சொல்லறே.'

'அதான் சார். இதுக்கும் அந்த டர்மரின் ஆய்வுக்கும் எதோ தொடர்பு இருக்கு. இப்படி இருக்கலாம் சார். பயோக்ரோம் ல அவரோட ஆய்வுக்கு வந்தது ஒரு ஆன்ட்டி கான்ஸர் மூலக்கூறு. அதனோட இந்த டர்மரின் மூலக்கூறை சேர்த்து புதுசாக ஒரு மூலக்கூறைத் தயாரித்திருக்கலாம். அவர் 'நான் தயாரிச்சது'ன்னு காப்புரிமை வாங்க திட்டமிட்ருக்கலாம்...'

'நல்ல லாஜிக். ஆனால் என்ன நிரூபணம்? டர்மரின் எப்படி அவருக்குக் கிடைக்கும்? டாக்டர் கோக்லேதான் மறுத்துட்டதாக சொல்லறாரே?'

அபிஜீத் சிரித்தான் 'சார். அரசாங்க லாப்.

கொஞ்சம் தள்ளினால், எல்லாக்கதவும் திறக்கும். கோக்லேக்கு தெரியாமலேயே.’

‘எங்கே போய் காப்புரிமைக்கு விண்ணப்பிக்க முடியும்? நம்ம நாடு’ மஞ்சள் என்னோடதுன்னு ‘சண்டை போட்டா?’

‘அது முழு மஞ்சள் மூலக்கூறுகளுக்குத்தான் பொருந்தும். கொஞ்சம் எடுத்து வேற மூலக்கூறோட ஒட்டவைச்சு, நான் இதை உங்க ஊர் மஞ்சள்லேர்ந்து எடுக்கவேயில்லைன்னு சாதிச்சார்னா? அதுவும் திறமையான சட்டநிபுணர்களை வாங்கி வாதாடினா, என்ன செய்ய முடியும்? இதெல்லாம், தென் அமெரிக்க நாடுகள்லேர்ந்து சுலபமா பண்ணிட முடியும். ப்ரேசில், ஈக்வடார்... மத்திய அமெரிக்க நாடுகள்... இதுக்கெல்லாம் ஒரு சொர்க்கம்.’ அபிஜீத் பேசப்பேச, ராஜீவ் வாயடைத்துப் போனார்.

‘இதில் பயோக்ரோம், பயோஜெனஸிஸ் போன்ற நிறுவனங்கள் என்ன ஆராய்ச்சி செய்யும்? அவர்களுக்கு லாபம் இருந்தாலொழிய மஞ்சளை அவர்கள் தொடப்போவதில்லை, இல்லையா?’

‘ஆமா சார். பயோக்ரோம், பயோஜெனஸிஸ் போன்றவை, ஒப்பந்த ஆய்வகங்கள். அவர்களுக்கு பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது ஆய்வுநிலையில் சில படிகளை இவர்கள் செய்யுமாறு ஆர்டர்கள் கொடுப்பார்கள். இத்தனை மாதிரிகளை பரிசோதித்து, இத்தனை நாட்களுக்குள் முடிவுகளை அனுப்பவேண்டும் என்பது ஒப்பந்தமாகியிருக்கும். செய்முறைப்

படிகள், என்ன கருவிகள் வேண்டுமென்பதை வேலை தரும் கம்பெனிகள் முதலிலேயே சொல்லிவிடுவார்கள். இவர்கள் அதன்படி செய்து, குறித்த நேரத்தில், அனைத்து மாதிரிக ளையும் சோதித்து முடிவுகளை அனுப்பவேண் டும். அதுதான் விதிமுறை. எனவே இவர்கள் ஆய்வு என்பது நேரத்தில் நிர்ணயிக்கப்படு கிறது. இவர்களால் அடிப்படை ஆய்வுகளை செய்ய முடியாது.'

'ஏன்?'

'அடிப்படை ஆய்வுகளைச் செய்ய காலம் வேண் டும். மருத்துவ குணமுள்ள ஒரு மூலக்கூறு, மருந்தாக வருவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கு மென நினைக்கிறீர்கள்?'

'என்ன.... மிஞ்சிப் போனா ரெண்டு வருஷம்?'

'பதினைந்து, இருபது வருடங்கள்.'

மலைத்துப் போனார் ராஜீவ்.

'அதுவும் ஆய்வு செய்யும் எல்லா மூலக்கூறுக ளும் மருந்தாவதில்லை. இது ஒரு சூதாட்டம் ராஜீவ் சார். மில்லியன்களில் பணம் முடக்கி ஒன்றுமே கிடைக்காமல் போவதுமுண்டு. நூறு மூலக்கூறுகளில் ஒன்று இரண்டு தேறும். அதுவும் இருபது வருடங்களுக்குப் பிறகு... எனவே எல்லா பன்னாட்டு மருந்து தயாரிக்கும் நிறுவனங்களும், எந்த மூலக்கூறு நம்பிக்கை யளிக்கும் அளவில் இருக்கிறதோ, அதை வைத்திருக்கும் கம்பெனிகளை வாங்கிவிட முயலும். இப்படித்தான் ஒரு பெரிய பன்னாட்டு

நிறுவனம், கொழுப்பைக் கரைக்கும் ஸ்டாட்டின் மூலக்கூறுகளில் ஆய்வு செய்த கம்பெனி ஒன்றை பெரிய தொகை ஒன்றிற்கு பல வருடங்கள் முன்பு வாங்கியது. அந்த மூலக்கூறு ஒன்று மட்டுமே அந்தக் கம்பெனிக்கு ஒரு வருடத்திற்கு ஒரு பில்லியன் டாலர் லாபம் சம்பாதிக்கிறது.'

ராஜீவ் வியப்பை அடக்க முயன்று தோற்றார். ஏன் மஞ்சள் பின்னாடி இத்தனை பேர் ஓடுகிறார்கள் என்பது கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்தது.

'அடிப்படை ஆய்வு செய்து ஒரு மூலக்கூறை ஒரு கம்பெனி விற்கிறது எனவச்சுக்குவோம். அதுக்கு எவ்வளவு பணம் கிடைக்கலாம்? சும்மா ஒரு குத்துமதிப்பா சொன்னாப் போதும்.'

அபிஜீத் நெர்வஸாகச் சிரித்தான் 'எப்படி சார் சொல்லறது? மூலக்கூறு, மிகத்தேவையான ஒரு துறைக்கு மருந்து தரும் என்றால் பல நூறு மில்லியன்களில் பேரம் பேசப்படும். சொறிசிரங்குக்கு களிம்பு என்றால் ஒரு பயல் சீந்தமாட்டான்.'

'எந்த வகையான மருந்துகளுக்கு டிமாண்ட் அதிகம் இப்ப?'

'சர்க்கரைநோய், கொழுப்பு, புற்றுநோய்.'

அபிஜீத் போனபிறகும், நெடுநேரம், நெடுஞ்சாலையில் எறும்புச் சாரையாய் ஊரும் கார்களை வெறித்துக்கொண்டிருந்தார்.

# அத்தியாயம் 15

பயோஜெனஸிஸ் வரவேற்பறையில் தன்னைக் காணவந்திருந்த மனிதரைக் கண்டு வினயா குழம்பினாள். யார் இவர்? பார்த்த நினை வேயில்லையே?

‘நான் ராஜீவ்’ என்று அறிமுகப்படுத்திக் கொண் டார் அந்த நெடிய மனிதர். ‘மாஸ் ஸ்பெக்ட்ரோ மீட்டர் டேட்டால ஒரு உதவிவேணும்’ என்றவர் இரு பிரபல அரசு விஞ்ஞானிகளின் பெயரை ரெஃபரன்ஸாகச் சொன்னார். இருவரும் காண்ட்டீன் நோக்கி நடந்தனர்.

‘டர்மரின்? நான் கேள்விப்பட்ட மாலிக்யூல் இல்லை. வேணும்னா எங்க சீனியர் சயன் டிஸ்ட்ஸ்... யூ.எஸ்ல கேட்டுப் பார்க்கட்டுமா?’ ஒல்லியான தேகமும், பளிச்சென புன்னகைக் கும் முகமுமாக, எளிமையான உடையில் வசீக ரித்த வினயாவை ராஜீவ் ஒரு முறை கவனமாகப் பார்த்தார். இந்தப் பயல் அபிஜீத் அதிர்ஷ்டசாலி தான்.

பல இளைஞர்களும், யுவதிகளும், காபிக்கோப் பையை வைத்துக் கொண்டு, குழுக்களாக அங்கிங்கு அமர்ந்தபடி பேசிக் கொண்டிருந்த

னர். மிக நாகரிகமான ஒரு சூழல்... ராஜீவுக்கு நிறை வைத் தந்தது. சுத்தமும், அமைதியும், நாகரிகமான பழக்க வழக்கங்களும் படிப்புடன் மட்டும் வருவதில்லை. சூழல், இருக்குமிடத்தின் விதிமுறைகள் பெருவாரியாக இதனை நிர்ணயிக்கின்றன.

'வேண்டாம்' என்றார் ராஜீவ். 'உங்களுக்கு மாஸ்ஸ் பெக்ட்ரோ மெட்ரி டேட்டா கொடுத்தால் அதனை பிரித்துப் பார்த்து என்ன இருக்கிறது என்று சொல்லத் தெரியுமா?'

வினயாசிரித்தாள் 'சார், பெயர் மட்டும்தான் அந்த கருவிகளுக்கு பொதுவானது. மற்றபடி அவற்றின் அடிப்படை அறிவியல், கருவிகள் வடிவமைப்பு, அவற்றின் மென் பொருள், ஏன் அதில் வரும் தகவலின் அமைப்பு எல்லாமே வேறாயிருக்கும். ஒரு நிறுவனம் செய்த கருவியின் டேட்டாவை மற்றொரு கருவியின் மென்பொருளில் பார்க்க முடியாது... எனக்கு ஒரு வகையான மென்பொருள் தெரியும். நீங்க தருகிற மென்பொருள் நான் பயன்படுத்தியதாய் இருந்தால் முயற்சிக்கலாம். அதுவும், முறைப்படி என் கம்பெனிக்கு தெரியப்படுத்த வேண்டும்.'

'கம்பெனிக்கு தெரிய வேண்டாம். இது. இது கொஞ்சம் ரகசியம்.' வினயாவுக்கு சந்தேகம் மெல்ல மூண்டது. 'சாரிசார். என்ன டேட்டான்னு தெரியலைன்னா, நாளைக்கு என்னோட வேலைக்கு வம்பு வந்துரக்கூடாது.'

ராஜீவ் பதில் சொல்லாமல் எழுந்தார் 'இன்

னிக்கு சாயங்காலம் ஆர்க்கிட் ஓட்டல்ல என் ரூமுக்கு வர முடியுமா?'

கோபத்தில் அதிர்ந்த வினயா சூடாகப் பேசத் தொடங்குமுன்னே ராஜீவ் புன்னகையுடன்தொடர்ந்தார் 'அபிஜீத்தோடுதான்.'

விக்கித்துப் போய் நின்றிருந்த அவளைக் கடந்து, சிரித்தவாறே நடந்த அவருக்கு, காண்ட்டீனின் வாசலருகே தனியாக அமர்ந்து டீ குடித்துக் கொண்டிருந்த மராட்டே, இடம் காலம் புரியாமல் விறைத்து வழக்கம் போல் சல்யூட் அடிக்க, மற்றவர்கள் அதனை தினுசாக வேடிக்கை பார்த்தனர்.

ஆர்க்கிட் ஓட்டலில் ராஜீவின் அறையில் வினயா, அவர் தந் தலேப்டாப்பை உயிர்ப்பித்தாள். பயோக்ரோ மின்வு அட்மினிஸ்ட் ரேட்டரின் கடலேச் சொல்லை பயன்படுத்தி உள்ளே நுழைந்து செயலிகளை இயக்கினாள். வெகுநேரம் திரையையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

'சீக்வென்ஸ்ல, சாம்பிள்களை நீக்கியிருக்காங்க. ஆடிட்ரெயில் கூட அழிச்சிருக்காங்க. க்ளெவர்.'

'என்ன சொல்கிறாள்?' என்பதாக அவர் அபிஜீத்தை ஏறிட்டார். நமக்கெதற்கு வம்பு என்பதுபோல மராட்டே விட்டேத்தியாக ஒரு நாற்காலியில் தூரத்தில் அமர்ந்திருந்தார். அவர் மனம் இருப்புக் கொள்ளவில்லை... 'சிக்னல்ல நின்னு ஹெல்மெட் போடாதவன், சீட்பெல்ட்டு போடாதவன், தண்ணியடிச்சுட்டு ஓட்டற லாரி

டிரைவர்ன்னு நூறுகேஸ் இப்பவே பிடிச்சாத் தான் இந்த மாசத்துக்கு ஓரளவுக்கு சீனியர் களுக்கு கொடுக்கமுடியும். இது தெரியாம இந்தாளு, மாஸ்... என்ன எளவோ, அதைப்பாரு, அந்தாளைப் பிடிங்கறான்.' வெறுப்பில் மராத்தி கெட்டவார்த்தை ஒன்று மௌனமாக அவர் வாயினின்று உதிர்ந்தது.

ராஜீவ் ஒரு முடிவுக்கு வந்தவராக எழுந்தார். 'மராட்டே, இந்தகேஸ் புரியணும்னா நமக்கு இவங்க சூழல், அமைப்பு புரியணும். எல்லாம் சோதனைச்சாலை சார்ந்த விஷயங்கள். இவை புரிஞ்சா மேற்கொண்டு நாம போயிட்டிருக்கிற பாதை சரிதானான்னு பாக்கலாம். வினயா, பயோக்ரோம் நடத்துற ஆய்வுகளைப் பற்றி, அடிப்படையாத் தெரிஞ்சுக்க என்ன செய்ய லாம்?'

'அங்கயே போய்ப் பாக்கலா மே சார்?' என்றான் அபிஜீத்.

'இல்ல, அவங்கள இப்பசு தாரிக்க வைக்க வேண்டாம். அங்கயிருந்து வெளியே போற ஒவ்வொரு மாதிரியையும் கவனிக்கச் சொல் லியிருக்கேன். உள்ள வர்ற மாதிரிகளைப் பத்தி ஒவ்வொரு தகவலும் எனக்கு வந்துடும். குப்பையில போடறதை கூடக்கவனமாப் பாத் துட்டுதான் விடறோம். ஆனா, அவங்க என்ன செய்யறாங் கங்கறது அவங்களுக்கு மட்டுமே தெரியுது' என்றவர் வினயாவைப் பார்த்தார்.

'நீ பயோஜெனஸிஸ்ல எங்களுக்கு சோதனைச்

சாலை அடிப்படையை விளக்க முடியுமா? எப்படி மாதிரிகள் உள்ள வருது, எப்படி எடுத்துக் கறாங்க, என்ன சோதனை, எந்த கருவியில எப்படி செய்யறாங்க... முடிவுகளை எங்க சேமிக் கறாங்க... எல்லாம் விளக்கமா சொல்லணும்.'

அவள் தயங்கினாள் 'செ... செய்யலாம். ஆனா எங்க கம்பெனி அனுமதிக்கணுமே? பயோக் ரோம் பத்தினத நம்ம கம்பெனியில ஏன் காட்ட றேன்னு மறுக்க 100% வாய்ப்பிருக்கு.'

'அதப்பத்தி கவலைப்படாதே... நீ விளக்க முடியுமா?' என்றார் ராஜீவ் அழுத்தமாக... அவள் சரியென தலையாட்டியதும், ராஜீவ் அபிஜீத்தின் பக்கம் திரும்பினார். 'நேத்திக்கு பயோக்ரோ முக்கு வந்த மாதிரிகள் இருந்த பாக்கெட் சிறுசா இருந்துச்சுன்னு நம்மாள் சொன்னாரு. ஆனா, எண்ணிக்கையில அதுல மாதிரிகள் ரொம்ப அதிகம். எப்படி இது சாத்தியம்?' என்றார். அபி ஜீத்தும் வினயாவும் புன்னகையுடன் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

'ஆய்வுச்சாலையில் காட்டறேன்' என்றாள் வினயா.

# அத்தியாயம் 16

பயோஜெனஸிஸின் ஆய்வுச்சாலையில் வினயாவைத் தொடர்ந்து, அபிஜீத்தும், ராஜீவும் மராட்டேயும் நுழைந்தனர். ஆய்வுச் சாலைக்கான வெள்ளைக்கோட்டு அணிந்து, தலைமுடி கீழே விழுந்துவிடாமலிருக்க, ஒரு உறையையும், ஷூக்களுக்கு மேல் ப்ளாஸ்டிக் உறைகளையும் அணிந்து நடப்பது மராட்டேக்கு கடினமாக இருந்தது. உள்ளே 18 டிகிரிசெ. வெப்ப நிலையில் அவருக்கு குளிர் ஆட்டம் கண்டது. அரசின் ஸ்பெஷல் அதிகாரி வருகை என்று பயோஜெனஸிஸுக்கு தில்லியிலிருந்து ஆணைவர, துரிதமாக அவர்களது வருகைக்கு பயோஜெனஸிஸில் அனுமதி தரப்பட்டிருந்தது.

எல்.ஸி.எம்.எஸ் எனப்படும் பொருண்மை நிறநிலைமானிக் கருவிகள் வரிசையாக பல மேஜைகளில் பெரிதாக அமர்ந்திருந்தன. அவற்றின் டர்போபம்ப்புகளின் ‘ம்’ என்ற சன்னமான ஒலி தொடர்ந்து கேட்டுக்கொண் டிருந்தது. மாடுசைஸில் கணினித் திரைகள் வரிசையாக வைத்த ஊசிகளைப்போல எதையோ காட்டிக் கொண்டிருக்க, நடுந டுவே, தானியங்கி மாதிரிதாங்கிகள், திடீரென

உயிர் பெற்று, ஹம் என்ற ஒலியுடன் மாதிரிகள் நிறைந்த குப்பிகளை எடுத்து வைத்து, அதில் இருந்த திரவங்களை உறிஞ்சி கருவிகளில் அனுப்பிக்கொண்டிருந்தன. மராட்டேக்கு அவை தானாகவே எல்லா வேலையையும் செய்துமுடித்துவிட்டு, அடக்கமாக முன்பிருந்த இடத்தில் வந்து அமர்வது வியப்பாக இருந்தது. ‘கான்ஸ்டபிள் தோர்வேக்கு பதிலா இந்த மாதிரி ஒண்ணு இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்? ஒரு ஃபைல் கொண்டுவான்னு சொன்னா, தா**ளி தோர்வே, அந்த அஸ்மிதா பக்கம் போய் வழிஞ்சு நிக்கறான்.’

வினயா, செய்முறைகளை அடிப்படையாக விளக்கிக்கொண்டிருந்தாள். ‘மலேரியான்னு சந்தேகப்பட்டா நாம கிளினிக்ல பரிசோத னைக்கு ரத்தம் கொடுத்துட்டு வர்றோமில் லையா? அதேபோல இங்க, மருந்து மூலக்கூறு கலவையை மிருகங்களுக்குக் கொடுத்து அவற்றிலிருந்து ரத்த மாதிரியை எடுப்போம். அதை சாம்பிள்ன்னு சொல்லுவோம்.
இதே போல எதை ஆராயணுமோ அதன் மாதிரிகளை கருவிக்குள்ள. ஸ்டாண்டர்டுன்னு சொல்லப்படுகிற, ஏற்கெனவே தெரிந்த அளவு உள்ள மாதிரிகளோடு சேர்த்து ஒரு கோர்வை யாக அனுப்புவாங்க. இந்த வரிசைக்கு சீக் வென்ஸ்ன்னு பெயர். கருவி, ஸ்டாண்டர்டுக்கு என்ன ரிசல்ட் தருதுன்னு பார்த்து, அதுபோல தெரியாத மூலக்கூறு மாதிரிக்கு என்னரிசல்ட் வருதுன்னு பொருத்திப்பார்த்து, மாதிரியில மூலக்கூறு எந்த அளவு இருக்குன்னு மென்

பொருள் சொல்லும். இதுல மாதிரிகளை ஒரு தானியங்கி உறிஞ்சியோட தட்டுகள்ல, குறிப் பிட்ட இடங்கள்ல வைக்கணும். அந்த இடங் களை குறிச்சு வச்சிருப்பாங்க.

இந்த வரிசைகளில், சில மாதிரிகளின் ரிசல்ட் டுகளை அழிச்சிருக்காங்க. அதோட, அவை வைக்கப்பட்டிருந்த இடங்களையும் குறிப்பி லிருந்து எடுத்திருக்காங்க. இப்படி செய்வதை மென் பொருள் ஆடிட்ட்ரெயில்னு ஒரு குறிப்புல வைக்கும். அந்த குறிப்பையும் அழிச்சிருக் காங்க. அந்த மாதிரிகளோட சுவடே தெரியலை.'

'என்ன கஷ்டம்? எந்த இடத்துல வைச்சதெல் லாம் அழிச்சிருக்காங்களோ, அதெல்லாம் தான் நம்ம டர்மரின் மாதிரிகள்' என்றார் மராட்டே சிரித்தபடி. உள்ளே அவர் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்... எந்தக் கடங்காரன் இப்படி ஒரு ரூமையே சவப்பெட்டி மாதிரி நடுங்கற குளிராக்கி வைச்சிருக்கான்? சிறுநீர் முட்டிக் கொண்டு வருகிறது.

'அப்படி எளிதில் சொல்லிட முடியாது சார்' என்றாள் வினயா. ''இந்த தானியங்கி மாதிரி உறிஞ்சிகளோட தட்டுகள்ல எங்க வேண்டு மானாலும் எந்த மாதிரியையும் வைக்கலாம். மென் பொருள்ல இது இங்க இருக்குன்னு சொன்னா போதும். வெறும் தண்ணியைக் கூட ஒரு இடத்துல வைச்சிருக்கலாம். அதை கணக் கீடுலேர்ந்து விலக்கியிருக்கலாம். ரகசியமா வைக்கிறது மட்டுமில்ல, குழப்பற வித்தை இது.'

மராட்டேயின் சிரிப்பு மறைந்தது. 'அவன் அம்மைக்கு...' என்பதாக 'உஸ்கிமாக்கி...' என்று ஒரு கெட்டவார்த்தையை அங்கு ஒரு பெண் இருப்பதால் சிரமப்பட்டு சன்னமாகச் சொன்னார்.

ராஜீவ் 'மராட்டே, இது முக்கியமான சிக்கல். மாதிரிகள் எங்கே வைச் சிருக்காருன்னு தெரிஞ்சாத்தான் நாம சட்டப்படி இங்கதான் இந்த சோதனைகளை செய்தார்னு நிரூபிக்க முடியும்' என்றார்.

'நாம ஏன் நிரூபிக்கணும் சார்? மஞ்சள் நாம காலம்காலமா பயன்படுத்திட்டிருக்கோமே?'

'மஞ்சளை நாம பயன்படுத்தியிருக்கோம். ஆனா அவற்றின் மருத்துவகுணங்களை அறிந்திருக்கிறோம் என்று கோர்ட்டுல நிரூபிக்கணும். சும்மா பயன்படுத்தினோம், அது குணமடைய வைச்சதுங்கறது, பாரம்பரிய மருத்துவ அறிவு இல்லை. ஒரு சான்று வேண்டும். எழுத்தில் இருந்தா ரொம்ப நல்லது.'

'பாட்டி வைத்தியமெல்லாம் வாய் வழி வந்ததாச்சே? எப்படி நிரூபிப்பாங்க?'

'அதான் சிக்கலே. இப்படித்தான் 1995ல மிஸிஸிபி மெடிகல் சென்டர்ன்னு ஒரு நிறுவனம் மஞ்சளோட எக்ஸ்ட்ராக்ட்ல குர்குமின் எடுத்து அதனோட ஆன்ட்டிகேன்ஸர், ஆன்ட்டி பயாடிக் குணங்களுக்கு மருந்தா பயன்படுத்த ஏகபோக முழு உரிமையும் பேடன்ட்டும் வாங்கிருச்சு... இந்த விஷயம் தெரியவந்து இந்தியா முழிச்சுகிட்டு 1997ல கோர்ட்டுல கேஸ் போட்டது.

ஜட்ஜுகள், இந்திய ஆயூர்வேத நூல்களில் 2500 வருஷம் முன்பே மஞ்சள் மருத்துவத்திற்கு பயன்படுத்தியதற்கு ஆதாரம் இருப்பதை, சி. ஐ. எஸ். ஆர் காட்டியதும், ஏகபோக உரி மையைரத்து செய்தது. இருந்தாலும் ரெண்டு வருஷத்துக்கு 'முதலில் கண்டுபிடியாதவர்' என்ற அளவில் பேடன்ட் மிஸிஸிபி மெடிக்க லுக்கு இருந்தது. சண்டை போட்டு மஞ்சளை நாம கைப்பற்ற வேண்டியிருந்தது. இதுல நேர அவகாசம், சான்றுகள் மிக முக்கியம்' என்றார் ராஜீவ்.

'சார், சான்றுக்கு நம்மகிட்டதான் ஹார்ட்டிஸ்க் இருக்கே?'

'அதுல இருக்கறதை அவர் எப்பவோ முகில் கணினி மூலமோ, எஃப். டி. பி மூலமோ எங்க அனுப்பணுமோ அங்க அனுப்பியிருப்பாரு. இந்த சோதனை நடந்த அதே நாளில், ஏதோ ஒரு நாட்டுல இதே மாடல் கருவியில், அந்த வரிசைகளை தரவிறக்கி, சும்மா ஆய்வு பண்ணினதா காட்டிரலாம். அதுக்கு அப்புறம் மாதிரிகளின் ரிசல்ட்டை அழிச்சிருக்கலாம்' என்றான் அபி. அனைவரும் வரிசையாக லாபிலிருந்து வெளியேறினர். அவர்கள் அணிந்திருந்த அடையாள அட்டைகள் ஒரு கருவியில் காட்டப்பட்டு, அது வெளியேறிய நேரத்தையும், அட்டை எண்ணையும் பதிந்து கொண்டது. அட்டை யாருக்குக் கொடுக்கப் பட்டது, எப்போது எந்த அறையின் மூலம் உள் நுழைந்தனர், எப்போது எந்த வழியின் மூலம்

வெளியேறினர் என்பது பதிவு செய்யப்பட்டது. இந்தத் தகவல்கள் தணிக்கைக்குரியவை.

பயோஜெனஸிஸின் கேன்டீனில் அவர்கள் அமர்ந்து சூடாக காபியை பருகிக் கொண்டிருந் தனர். 18 டிகிரியிலிருந்து வெளியே வந்தவர்க ளுக்கு காபி மிக இதமாக இருந்தது.

‘அப்போ, அந்த மாதிரிகள்? அவை இங்க எங் கயோதான் இருக்கணும் இல்லையா? அதை சான்றாகக் காட்டினா?’ என்றார் மராட்டே, பாத்ரூமுக்கு அவர் மட்டும் முதலில் சென்று வந்திருந்தார்.

‘ரைட். அதை கண்டுபிடிக்கலாம்’ என்றார் ராஜீவ்.

‘சார்’ என்றாள் அயர்வுடன் வினயா, தனது மடிக்கணினியின் திரையைக் காட்டிய படி‘இது பயோக்ரோமோட வலைத்தளத்துல கிடைச்ச தகவல். கேளுங்க. பயோக்ரோம்ல 45 டீப்ஃப்ரீஸர்கள் இருக்கு. மைனஸ் 70 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலை கொண்டவை. ஒவ்வொன்றிலும் நாலு தட்டுகள். ஒவ்வொரு தட்டிலும் முப்பது பெட்டிகள். ஒருபெட்டிக்குள் நூறு மாதிரிகள். இதோடு 1 டிகிரி சென்டி கிரேடு குளிர்பதனப் பெட்டி முப்பது இருக்கு. அதுல…’

ராஜீவ் அசந்து போனார். இத்தனை மாதிரிக ளில் எவை டர்மரின் கொண்டவை?

‘மாதிரிகளை கையாளுவதற்கென காப்பாளர் கள் நாலுபேர் இருக்கிறார்கள். அதோடு மென் பொருளும் இருக்கு. அந்த மென் பொருளின்

முழு அதிகாரமும் தாஸ்ஸின் கையில் இருந்தது' மராட்டே, பயோக்ரோமுக்கு ஃபோன் செய்து தகவல் சேகரித்திருந்தார்.

ராஜீவ் தனக்குள் முணுமுணுத்தார் 'அங்கும் மாதிரிகளின் தடயத்தை அழித்திருப்பார் தாஸ்.' எப்படி டர்மரின் மாதிரியைத் தேடுவது?

# அத்தியாயம் 17

மலைப்பாக இருந்தது ராஜீவுக்கு. தாஸும் பிடிபடவில்லை. இப்போது இப்படி ஒரு சிக்கல். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் தாஸ் வெற்றியை நோக்கி முன்னேறுகிறான். சுனந்தாவின் சமீபத்திய கிறுக்கல் நினைவு வந்தது. 'சரி, . டர்மரின் 384... அதென்ன 384?'

வினயா சிந்தித்தாள் 'பொதுவா மருந்து மூலக்கூறுன்னா 15, 20 வருஷம் ஆராய்ச்சிங்கறது சர்வ சாதாரணம். இதுல பல முறை புதிய மூலக்கூறு வடிவ ஆராய்ச்சி தோற்றுப் போயிருக்கும். ஒவ்வொன்றும் தொடர் எண் ஒன்றால் அறியப்படும். இந்த மூலக்கூறு 384வது தடவை செய்த சோதனையில் சற்றே வெற்றி பெற்றிருக்கலாம். இன்றும் சந்தையில், பிரபலமான ஒரு ஆயூர்வேத மருந்து, அது எத்தனையாவது சோதனை முயற்சியில் வெற்றி பெற்றதோ அந்த எண்ணைத் தன் பெயரில் கொண்டிருக்கிறது. வாங்க, மாதிரிகள் வைக்கிற ஃப்ரீஸர் அறைக்கு போலாம்' என்றாள் வினயா.

அவளும் ராஜீவும் மட்டுமே மாதிரிகள் வைத்திருக்கும் அறையில் நுழைந்தனர்.

‘ஆய்வாளர்கள் தங்களுக்கு வேண்டிய மாதி ரிகளின் பட்டியலை இங்கு கொடுப்பார்கள். ஒருத்தர் அதைப் பார்த்து, எங்க மாதிரிகள் இருக்கோ அந்த ஃப்ரீஸரைத் திறந்து எடுத்து கொடுக்கணும். கேட்பதும் கொடுப்பதும், நேரக்கணக்கோடு பதிவு செய்யப்படும். இங்க பாருங்க’ என்று ஒருவன் ஃப்ரீஸரைத் திறப்ப தைக் காட்டினாள். ராஜீவ் அங்கு ப்ளாஸ்டிக் பெட்டிகளில் வைத்திருந்த மாதிரிகளைப் பார்ப்பதை கவனித்தாள்...

‘மாதிரிகள் இப்படி ட்யூப்லதான் இருக்கணும்னு இல்ல வைப்பாங்க... ப்ளாஸ்டிக், கண்ணா டிப்ளேட்டுகள்ல ரெண்டு ப்ளேட்டுகளுக்கு நடுவே உருவாக்கின குழியில மாதிரி சேமித்து வைப்பாங்க. அதுக்கு வெல்ப்ளேட்னுபேரு. சின்ன சைஸ்னால, நிறைய மாதிரிகளை சோதனை செய்யலாம்... சின்ன பெட்டியில எப்படி பெருமளவு மாதிரிகள்னு கேட்டிங்களே? வெல்ப்ளேட்ல அனுப்பியிருக்காங்க. ஆங்... இங்க இருக்கு பாருங்க.... இதுதான் வெல்ப் ளேட்...’

வினயா காட்டிய பொருள் செவ்வகமாக இருந்த சிறிய ப்ளாஸ்டிக் டப்பா. அதில் பல்லாங்குழி போல இருந்த குழிகள் ஓரம் கிடை மட்டமாக 1, 2 என எண்கள் 12 வரை இருக்க, நெடுமட்டமாக அ ஆ என ஏ வரை பொறிக்கப்பட்டிருந்தன. 12 x 8 = 96 மாதிரிகள் கொள்ளும் ஒரு பெட்டி. ‘சோதனை என்றாலே ஒரு சோதனைக் குழாய் தான் நமக்கு நினைவுக்கு வரும். சிறிய 2 மிமீ

விட்டமுள்ள குழாய்கள் பிர பலம். அதில்லாமல் இவையும் பிரபலம். போலாமா சார்?'

ஆய்வுச்சாலையை விட்டு வெளியேறும் போது மலையாளச் ஜாடையில் ஒரு பெண் அவர் களுக்காகக் காத்திருந்தாள். 'ஹலோ நான் ஜென்ஸி. பயோஜெனஸிஸின் எம்.டி விஸ்வாஸ் ரிஜ்வானியின் காரியதரிசி. எம்.டி உங்களை பார்க்க விரும்புகிறார்.'

ரிஜ்வானியின் அறையின் அளவைப் பார்த்து வாயைப் பிளந்தார் மராட்டே '2 பெட்ரூம் ஹால் கிச்சன் வீடு ஒண்ணு கட்டிரலாமே இதுல?' பெரிய தேக்கு மேஜையின் மறுபுறம் மெலிந்த, உயரமான மனிதர் அமர்ந்திருந்தார். ஜென்சி அவர்களை ஒரு வட்ட மேஜையின் அருகே இருந்த நாற்காலிகளில் அமரச் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவர் நடந்து வந்து கை குலுக்கினார். நிதானமாக கால் மேல் கால் போட்டு அமர்ந்தவர் 'அரசின் உயர் அதிகாரி வருகிறார் என்றதும், கொஞ்சம் பெருமிதம். கொஞ்சம் அச்சம் அரசைப் பகைத்துக்கொண்ட எந்த கார்ப்பரேட் கம்பெனி உருப்படியாக இருக்க முடியும்? அதுவும் நாங்கள் அறிவியல் சேவைப்பிரிவு சேர்ந்தவர்கள்.'

'அரசும் கார்ப்பரேட்டைப் பாத்து பயப்படுகிறது. பணம் உள்ளவன் பலசாலி' என்றார் ராஜீவ்.

சிரித்தபடி வினயாவைப் பார்த்தார் ரிஜ்வானி. 'வினயா... எப்படி போய்க் கொண்டிருக்கிறது ப்ராஜெக்ட்?'

‘நல்... நல்லா போயிட்டிருக்கு சார்’ வினயா திகைப்பில் திணறினாள். ரெண்டாயிரம் பேர் வேலை செய்யுமிடத்தில் தன் பெயரை எம்.டி தெரிந்து வைத்திருக்கிறார் என்றால்...?

‘ராஜீவ். இந்தியாவில் முப்பது கம்பெனிகள் எங்களைப் போன்று ஒப்பந்த ஆராய்ச்சியில் இருக்கின்றன. எங்களுக்கு ஒரே போட்டியாளர் பயோக்ரோம். இந்த வருடம் அவர்களை முந்தி விடுவோம்... நாணயம், கடின உழைப்பு, வினயா போன்ற அறிஞர்கள் எங்கள் கம்பெனியில் உழைக்கிறார்கள். அதிர்ஷ்டம் எங்களுக்கு.’

அபிஜீத் நினைத்தான் ‘எவ்வளவு பெரிய மனிதர்? மனிதநேயம்... நாணயம் அதுதான் இந்தியாவின் சிறந்த இயக்குநராக போன வருடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். வெளியே வந்த பின்பும் அவன் பிரமிப்பு அடங்கவில்லை. இங்கு வேலை கிடைத்தால்...

ராஜீவ், தில்லியை அழைத்துச் சொன்னார். ரிமோட் இணைப்பில் இரு நாட்கள் அனுபவமிக்க அரசு விஞ்ஞானிகள் அந்த சீக்வென்ஸ்களை வரி வரியாக ஆராய்ந்தார்கள். வினயா சொன்னதையே சொன்னார்கள். டி.ஆர்.டி.ஓ தனது வல்லுநர்களை அழைத்து, அழிந்து போன வரிகளை மீட்கச் சொன்னது. அவையும் பலிக்கவில்லை. மென்பொருள் படுசுத்தமாக வரிகளை அழித்திருந்தது.

இரு நாட்களுக்குப் பின், அபிஜீத் வீட்டிலிருந்து கிளம்பும்போது எதிரே வந்த வினயாவைப்

பார்த்து வியந்தான். ‘ஆபீஸ் போகலே?’ பதில் சொல்லாமல் நின்ற அவள் கண்களில் துளிர்த்த நீரைப் பார்த்துப் பதறினான். ‘என்னாச்சு?’

‘வீட்டுல நம்ம காதல்பத்திச் சொல்லிட்டேன். பயங்கர சண்டை.’

அவன் பெருமூச்செறிந்தான். நிலைமை நன்றாக இருந்திருந்தால், அவனே நேராகப் போய்ப் பார்த்திருப்பான். இப்போ, வேலையுமில்லாமல் இருப்பவனுக்கு யார் பெண் தருவார்கள்?

‘இன்னும் ஒரு வாரத்துக்குள்ள வீட்டுல ஒரு முடிவு சொல்லணும்னு சொல்லியிருக்காங்க. அந்த யூ.எஸ் மாப்பிள்ளை வீட்டுல ரொம்ப கேக்கறாங்களாம். நான் என்ன சொல்லட்டும் அபி? உங்கூட வந்துடலாமான்னு தோணுது. ஆனா அது வேணாம்னு பாக்கறேன். பெரிய வங்க சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்க ணும்னு நீயும் சொன்ன. நானும் நினைக்கறேன். என் நிலையையும் புரிஞ்சுக்கோ அபி.’ பதி லுக்குக் காத்திராமல் அவள் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள்.

அபி பொரிக்கும் வெயிலில் நின்றான்.

# அத்தியாயம் 18

சுனந்தாவின் அருகே இரு மணி நேரமாக காத்திருந்தனர் மராட்டேயும், அபிஜீத்தும். 'நீ எதுக்குப்பா? போய் வேலையை கவனி' என்று அவர் தடுத்தும் அபி கேட்கவில்லை. நாட்டின் சொத்து கொள்ளை போகிறது.... அதில் தான் ஏதோவொரு விதத்தில் சிக்கியிருப்பதாக நினைத்தான்.

சுனந்தாவின் கைகள் மெல்ல அசைந்தன. வாயில் கோழை ஒழுக, முனகினார். 'சிஸ்டர்' என உரக்க அழைத்த மராட்டே வெளியே விரைய, அபி அவர் அருகே குனிந்தான்.

'பேப்... பேப்பர்.' சுனந்தா அப்படித்தான் சொல்லியிருப்பாரோ என்று ஊகித்து அவசரமாக பேப்பர் தேடி, கிடைக்காமல், தனது லேப்டாப் பையில் இருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து விரித்தான்.

ஸ்கெட்ச் பேனாவை மூன்று விரல்களில் வளைத்துப் பிடித்து சுனந்தா ஏதோ கோண லாகக் கிறுக்கினார். கையின் அழுத்தத்தில் ஸ்கெட்ச் பேனாவின் முனை அழுந்தி, மையின் தடம் பெரிதாகப் பரவியது.

‘மாஸ் ஸ்பெக்... 384’ அவர் கை தளர்ந்தது. மீண்டும் தலை வலப்பக்கம் சரிய, அசைவுகள் நின்று நீளமான மூச்சு அவரிடமிருந்து வெளிப் பட்டது. மீண்டும் 384... என்ன எண் இது? 384 பொருண்மை எண்கொண்ட மூலக்கூறாக இருக்குமோ? வினயாவிடம் ஃபோனில் கேட் டான்.

‘இல்லை’ என்று பதில் வந்தது. அந்த பொருண்மை எண்ணில் டர்மரின் என்று ஒரு மூலக்கூறும் பட்டியலில் இல்லை. ஐஸோமர்கள் எனப்படும் அதே பொருண்மை கொண்ட பல மூலக்கூறுகள்? கோபத்தில் திட்டி ‘ஃபோனை வை’ என்று கூறிவிட்டாள்.

ராஜீவுக்கு ரியோவில் கண்காணிக்கப்பட்ட ஒரு வனின் ‘முகச்சாடை தாஸை ஒத்திருப்பதாக’ செய்தி வந்தது. அலசியதில் அவன் ரஹ்மான் என்ற பங்களாதேஷி என்பது தெரியவந்தது. பங்களா தேஷிக்கும் பெங்காலிக்கும் என்ன வித்தியாசம் ப்ரேசில் ஹேண்ட்லருக்கு தெரிந்து விடப்போகிறது? ‘தவறான அபாய எச்சரிக்கை ஃபால்ஸ் அலார்ம்’ என்று அது விடப்பட்டது.

ராஜீவ் அன்று மதியம், குற்ற அறிவியல் உளவி யல் வல்லுநர் ஒருவரைச் சந்தித்தார். சுனந்தா வின் அனைத்து எழுத்துக்களையும் காட்டி னார், தொடர்ந்து சுனந்தாவை கண்காணித்துப் பதிவு செய்திருந்த சி.சிடி.வியின் பதிவுகளையும் உளவியல் வல்லு நர் கவனமாகப் பார்த்தார்.

‘இவங்களுக்கு முழுதாக உணர்வுகள் வரல.

பாருங்க, கண்கள் இன்னும் தெளிவாகலை.’

‘அப்ப இவங்க எழுதினதெல்லாம்?’

‘பாதி உணர்வில் மனம் முழிச்சிருக்கு, உடல் இன்னும் ஒன்று சேர உதவலை. எழுதுவது கோர்வையாக இல்லாதிருக்க வாய்ப்பு இருக்கு. டர்மரின் என்பது வேறு ஒரு நினைவும், 384 வேறொரு நினைவுமாக இருக்கலாம்.’

ராஜீவ் தளர்ந்தார். அடிப்படையே ஆடுகிறதே?

வல்லுநர் நிமிர்ந்து அமர்ந்தார் ‘ஆனா ஒரு நல்ல விஷயம். இவர் வேண்டுமென்றே பொய்யாக தகவல் தந்து குழப்பல. அவங்க இருக்கிற நிலையில பொய்பேச வேண்டுமெனத் தோன்றவே வாய்ப் பில்லை. ஏதோ அவர்களது நினவிலிருந்து வருகிறது. உங்களுக்கான செய் தியாகவோ, அல்லது முன் நிகழ்ந்த ஒரு நிகழ் வின் நினைவின் துண்டுப் பிரதியாகவோ இது இருக்கலாம்.’

‘384... இது ஏதாவது புதிர்க்குறியீடா, டாக்டர்?’

வல்லுநர் உதட்டைப் பிதுக்கினார் ‘வாய்ப்பே இல்லை. அவங்க இருக்கிற நிலையில புதிர் போடவெல்லாம் மூளை இயங்காது. ஏதோ நினைவின் துண்டு அல்லது தெளிவான ஒரு செய்தி.’

ராஜீவ் எழ முயன்றார். மற்றொரு டெட் எண்ட்...

வல்லுநர் திரையைப் பார்த்துக்கொண்டே பேசி னார் ‘இந்த வார்த்தைகள் அவங்களை மிகவும் சார்ந்த சூழ்நிலையில் உள்ள சொற்கள். அவங்க

சூழலை கவனமா ஆராய்ந்து பாருங்க. ஆல் தி பெஸ்ட்.'

மராட்டே, ராஜீவிடம் 'தாஸோட வீட்டை இன்னொரு தடவை சோதனை போடட்டுமா? இது பத்தி எதாவது கிடைக்குதான்னு பாக்கறேன்' என்றார்.

'செய்ங்க, மராட்டே. அவர் காணாமப் போனப்போ சோதனை போட்டீங்களே? என்ன கிடைச்சது?'

'ஒண்ணும் புதுசா கிடைக்கலை. க்யூபாசிகார், பழைய புத்தகங்கள் கொஞ்சம், அதோட அஹெம்... ம்.... ஒரு பாக்ஸ் நிறைய போர்னோகிராஃபி டி.வி.டி. ஆணுறை பாக்கெட்டுகள்.'

ராஜீவ் நிமிர்ந்தார். மராட்டே சங்கடமாகச் சிரித்தார் 'இருந்ததைச் சொன்னேன். இந்தாளு கலியாணமும் செஞ்சுக்கலை. ஆக்டிவ் வாவேறெ இருக்கான்'

'இண்ட்டெர்நெட் கனெக்ஷன்... அது செக் பண்ணீங்களா?'

'இருக்கு. நாங்க செக்பண்ணி பாக்கலை.'

'உடனே எந்தெந்த ஐ. பி அட்ரெஸ் எல்லாம் பாத்திருக்கான்னு பாருங்க. அதுலயாருக்கு தகவல் தரவேற்றியிருக்கான்னு தெரியும். அந்த விவரமெல்லாம் சேகரியுங்க.'

மராட்டே விரைந்தார். ராஜீவ் டாக்ஸி ஒன்றை வரவழைத்து 'பயோக்ரோம் போப்பா' என்றார். சில நேரங்களில் தனியாகப் போவது நல்லது.

போகிற வழியில் ஒரு மெடிக்கல் கடையில் நிறுத்தி, ரப்பர்கையுறை, மருத்துவமனை முகத் திரை, சில ஜிப் லாக் ப்ளா ஸ்டிக் பைகள் என வாங்கிக்கொண்டார்.

நேராக மாதிரிகள் காப்பாளரிடம் போனார். அங்கிருந்த பெண் முதலில் பதில் சொல்லத்த யங்கினாள். அவள் ஃபோனில் யாரிடமோ உத் தரவு கேட்பதை கவனியாததுபோலக் கேட்டார் ராஜீவ். பூனே பக்கத்து மராட்டி மொழி...

# அத்தியாயம் 19

‘எந்த ஊரும்மா உனக்கு. புனே?’

எச்சரிக்கையானாள் அவள் ‘இல்லை’ என்றாள் சுருக்கமாக.

‘பூனேல சோம் வார்பேட்பக்கத்துல இருந்திருக்கேன். மராட்டி கல்ச்சர்னா பூனே தான். இந்த கேடு கெட்ட மும்பைக்கர்களுக்கு எங்க சுத்த மராட்டி பேச வருது? நீ பேசினபாரு, அது மராட்டி.’

அவள் சற்றே புன்னகைத்தாள்.

‘புனேக்கர் தானே? அதான் மராட்டி இத்தனை சுத்தமா இருக்கு. உன்னை மாதிரி அழகான பெண்களுக்கு ஒழுங்கா பொய் பேசவராது. அப்படியே பொய் சொன்னாலும் உன்முகமும் மொழியும் காட்டிக்கொடுத்துருச்சு பாரு.’

இப்போது அவள் களுக் என பெருமை பொங்க சிரித்து ‘ஆமா சார்’ என்றாள்.

தாஸின் அறையில் ராஜீவ் அங்குலம் அங்குலமாக விழிகளால் அளவெடுத்தார். ஒரு மனிதன் அறையில் இருப்பதில்லை. அறை அவனது விருப்பத்தில் மாறுகிறது என்பது அடிப்படை

பிஹேவியரல் சயன்ஸ். நாம் இருக்கும் வீடும், சுற்றுப் புறமும் நமது நடத்தைக் கேற்பவே மாறு கிறது. மனிதனை மாற்றினால் சுற்றுப் புறமும் மாறும்.

ராஜீவ் அந்த அறையில் தாஸின் பண்புகளைத் தெரிவிக்கும் பகுதிகளைத் தேடினார். இது பன்னாட்டு நிறுவனம். பெயிண்ட்கலர் எல்லாம் அவர்கள் தீர்மானிப்பது. அதை விட்டுவிடலாம். மேஜை? அதுவும் அவர்கள் தீர்மானிப்பார்கள். மேஜைக்கு மேலும், அதனுள்ளும் இருப்பது அதனை பயன்படுத்துபவனின் நடவடிக்கை யைக் காட்டும். தாஸின் மேஜை படுசுத்தமாக இருந்தது. கோப்புகள் ஒரு வரிசையில் அலமா ரிகளில் வைக்கப்பட்டிருந்தன. மேஜை டிராய ரைத் திறந்தார் ராஜீவ்.

சில கோப்புகள். அலமாரியில் வைக்கப்படா மல்... 'SOP for samples and standards delivery & from custodian to analyst' மாதிரிகள் காப்பா ளரிடமிருந்து, ஆய்வு செய்பவருக்கு மாதிரிகள், ஸ்டாண்டர்டுகள் கொடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய செய்முறைகள்.'

வினயா, 'செய்முறை கோப்புகள் தனியாக வைக்கப்பட்டிருக்கும்' என்றாளே? இது ஏன் தனியாக இருக்கிறது? எடுத்துப் படித்துப்பார்த் தார். புரியாத மொழி, ஒருத்தர் இன்னொருத் தரிடம் 'இந்தாவச்சுக்க' என்று கொடுப்பதற்கு இத்தனை பாடா? முணுமுணுத்துக்கொண்டே அதன் முதல் பக்கத்தைப் பார்த்தார்.

திருத்தப்பட்ட படிவம் எண் 1. 2. அதில் கம்பெனியின் சீல் இல்லை. தற்சமயம் நடைமுறையில் இருக்கும் செய்முறை என்ன என்று மாதிரி காப்பாளரிடம் விசாரித்தார். ‘படிவம் எண் 1. 2’ என்றாள் அவள்.

‘படிவம் 1. 1க்கும் 1. 2க்கும் என்ன வேறுபாடு?’ போலீஸ்புத்தி, தெரியாததையும் கேட்க வைக்கிறது.

‘1. 2ல லாப்டைரக்டர், நேராவந்து அவசரமான, முக்கியமான மாதிரிகளை மென்பொருளில் பதியாமலேயே எடுக்கவோ, வைக்கவோ செய்யலாம். அது மென்பொருளில் பதிந்தாலும், அவர் அதனை நீக்கலாம்.’

‘ஆனாசார்’ என்றாள் அந்தப் பெண் தயங்கி... ‘இது முறைப்படி செய்யக்கூடாத ஒன்று. ஆடிட்டர்கள் வந்தா லாபையே மூடிருவாங்க. அவங்க எப்பவேணும்னாலும் வரலாம்.’

‘இதையாரு மாற்றியது?’

‘சுனந்தாமேடம். அவங்கதான் மாத்த முடியும்.’

ராஜீவ் திகைத்தார். சுனந்தா?

‘சுனந்தாவே வந்து இதை கொடுத்தாங்களா?’

‘இல்ல. அவங்க கொடுத்ததாச் சொல்லி டாக்டர் தாஸ் கொடுத்தார்.’

புரிந்தது அவருக்கு. தாஸ் வேண்டுமென்றே செய்தமாறுதல்கள். ஆடிட்டர்கள் பார்த்தால் அந்த களேபரத்தில் இவர் செய்தவை யெல்

லாம் சுனந்தாமேல் பழியேறிவிடும்.

இப்போது தாஸ் என்ன செய்து கொண்டிருப் பார்? ராஜீவின் ரத்த ஓட்டம் அதிகரித்தது. அவன் முந்துமுன் நான் முந்தவேண்டும். ஆனால் எங்கே அவன் ஓடுகிறான்? நான் எந் தத்தடத்தில் ஓடுகிறேன்? தெரியவில்லை.

# அத்தியாயம் 20

‘காப்புரிமை வாங்குவது அவ்வளவு எளிதில்லை. ஏற்கெனவே நாம விழிப்பா இருக்கறதால, ரொம்பவே கடினம்தான்’ ராஜீவின் நண்பர் லாயர் டிசூஸா ஆர்க்கிட் ஓட்டலில் சொல்லிக்கொண்டிருந்த போது, மராட்டே வரவில்லை. ஏதோ டெலிகாம் கம்பெனிகள், சைபர்க்ரைம் போலீஸ் என்று சென்றுவிட்டிருந்தார்.

‘என்ன வழியெல்லாம் அவங்க எடுக்க முடியும்?’

‘ம்ம்ம். எந்த வகையில பதிவு தாக்கல் பண்ணறாங்கங்கறதைப் பொறுத்து இருக்கு. பாரிஸ் கன்வென்ஷன் ரூட்ல போனா, பல நாடுகளில் காப்புரிமை வாங்க ஒரு வருஷம் காத்திருக்கணும். அப்புறம் ஒவ்வொரு நாடா அவன் காப்புரிமை வாங்கணும். நாளும், செலவும் அதிகரிக்கும்.

பி.ஸி.டி (PCT) ரூட்லபோனா பதினெட்டு மாசத்துக்கப்புறம்தான் இன்டர்நேஷனல் காப்புரிமைக்கு எடுத்துப்பாங்க. அதுக்கப்புறம் ஒரு வருஷம் கழிச்சு பல நாடுகளுக்கும் காப்புரிமைக்குப்போலாம். இது செலவு கம்மி. ஆனா நேரமும், கெடுபிடியும் ஜாஸ்தி.

பாரீஸ் ரூட்ல பன்னிரண்டு மாசம் கழிச்சு அடுத்த நாட்டுக்குப் போனாக் கூட, ஒருவருஷம் முன் னாடி தாக்கல் செய்த நாள்லேர்ந்து சீனியாரிட்டி, முதன்மைத்தன்மை கிடைக்கும். அவன் பதிவு செய்து தாக்கல் செஞ்சா, நமக்குத் தெரியவரும். அப்ப நாம போராடலாம். என்ன டாக்குமெண்ட் சான்றுகள் வைச்சிருக்கோம்?'

ராஜீவ் சொல்ல, டிசூஸா சிந்தனைவயப்பட்டார் 'மாதிரிகள் இல்லாம போனா சிக்கல்தான். 1997ல போராடின மஞ்சள் கேஸ் வேற. நாம ஆயூர்வேத நூல்களை ஆதாரம் காட்டினோம். இப்ப இது மஞ்சள் லேர்ந்துதான் எடுத்த துன்னே நிரூபிக்க முடியாதுங்கறீங்க. அப்ப நம்ம சைடு வீக்குதான். எதுக்கும் சி எஸ் ஐ.ஆர்ல லீகல்துறைல கேக்கச் சொல்லு.'

'அங்கயாரு இத பெருசா எடுத்து வேலை பாப்பாங்க?'

'95ல டாக்டர்மா ஷேல்க்கர் தலைமைப் பொறுப் புல இருந்தார். அவர் மும்முரமா இறங்கினதால மஞ்சள் நமக்கு கிடைச்சது. அப்புறம் வேப்பிலை எக்ஸ்ட்ராக்ட். அதையும் போராடித்தான் வாங் கினோம். எதுக்கும் எங்கயாச்சும் டர்மரின் காப் புரிமைன்னு தாக்கல் செய்திருக்காங்களா ன்னு பாக்கறேன்.'

மராட்டே, டிசூஸா போன ஐந்து நிமிடத்தில் வந்தார். ஒரு சிம்கார்டை ராஜீவிடம் நீட்டினார். 'தாஸ் வீட்டுல கிடைச்சது. அவர் வீட்டுப் பகுதி யில இருக்கிற செல்ஃபோன் போஸ்ட்டுகள்ல

எந்தெந்த எண்களுக் கெல்லாம் ஃபோன் வந்திருக்கு, கால் வெளியே போயிருக்குன்னு அலசினோம். அதே மாதிரி பயோக்ரோம் பக் கத்துலயும் பார்த்தோம். ரெண்டு ஃபோன் நம்பர் இரண்டு இடத்துலயும் ஒரே மாதிரியா வந்தது. ரெண்டுத்துலயும் கடைசி தொடர்பு அவர் காணாமப் போன அன்னிக்கு மாலையோட முடிஞ்சிருக்கு.'

'இன்ட்ரெஸ்டிங்' என்றார் ராஜீவ் வியப்போடு.

'அந்த எண்களை தேடினேன். வச்சிருந்தவனை பூனா ஹைவே பக்கம் பிடிச்சோம். இன் னொன்ணு தாஸ் வீட்டுல கிடந்தது. அது அவர் பயன்படுத்தியதா இருக்கணும்.'

'அவன் எங்க?'

'ஸ்டேஷன்ல வச்சி விசாரிச்சிக்கிட்டிருக்கோம். நீங்க கேள்வி கேக்கணுமா? போலாம்.'

இருவரும் எழுந்தனர்.

அவன் ஒல்லியாக பரட்டைத் தலையுடன் இருந்தான். 'விட்டுறுங்க சார். ரெண்டாயிரம் கொடுத்தாங்க. போன் மட்டும் தான் பண்ணச் சொன்னாங்க.'

பளீரென்று மராட்டே அறைந்ததில் நிலைகு லைந்தான். 'தேரி... முழுசும் சொல்லுடா...'

பல அடிகளின் பின் அவன் ஒரு மாருதிகாரில் இருந்த ஒருவனை அடித்துப்போட்டு, ஒரு யூஎஸ்பியை எடுத்ததையும், காரை ஹை வேயில் நிறுத்தியதையும் சொன்னான்.

'யார்டா செய்யச் சொன்னது?'

'அந்த பயோக்ரோம்லேர்ந்து ஃபோன் பண்ணு வாரே அந்த பார்ட்டிதான்.'

தாஸ்? தானே யூ.எஸ்பியைக் கொடுத்துவிட்டு ஏன் திருட வைக்க வேண்டும்? 'நீ யூ.எஸ்.பியை யாருகிட்ட கொடுத்தே?'

'அந்தேரியில ஒரு பார்ட்டி. ஸ்டேஷன்ல ஒண் ணாம் ஃப்ளாட்பார்ம்ல வந்து, இண்டிகேட்டர் கீழே மீட் பண்ணுன்னான். அன்னிக்கே வாங் கிட்டுப் போயிட்டான்.'

ராஜீவ் சுதாரித்தார். இதில் ஏதோ சூது இருக்கி றது.

'மராட்டே, நீங்க தாஸோட செல்நம்பர்லேர்ந்து கடைசிகால் எப்ப போச் சுன்னு பாருங்க.'

மராட்டே தனது தகவலை ஆராய்ந்தார். 'மூணு மணிக்கு அதுலேர்ந்து கால் போயிருக்கு. ரெண்டுநிமிசம் நாலு செகண்டுபேசியிருக்காரு. இவன் கிட்டேயிருந்து ஒன்றரைக்கு அவருக்கு ஃபோன் போயிருக்கு.'

'நான் யூ எஸ் பி யை எடுத்துட்டதை கூப்பிட்டுச் சொன்னேன்' என்றான் பரட்டைத்தலை.

அவர், வந்த இருவரோடு வெளியேறினது அதன் பின்னர்தான். 'யாருக்கு ஃபோன் பண்ணியிருக் காருன்னு பாருங்க. அந்த ஆள் முக்கியம்.'

மராட்டே அந்த எண்ணை குறித்துக்கொண்டு விரைய ராஜீவ் சிந்தனை வயப் பட்டு நின்றார்.

ஒருவனல்ல இங்கு ஏமாற்றுவது. அவர் செல்ஃ போன் கிணுகிணுத்தது.

டாக்டர் மேத்தா பயோக்ரோம் என திரை ஒளிர்ந்தது. 'ராஜீவ், நாளைக்கு காலேல பயோக்ரோம் வர முடியுமா? முக்கியமான விசயம்.'

பேசிமுடித்து ஃபோன் வைக்கையில் டிசூஸா உள்ளே நுழைந்தார். ஒரு கத்தைகாகிதத்தை மேஜையில் போட்டார். 'நீங்க சொல்றது உண்மை தான், ராஜீவ். டர்மரின் சேர்ந்த ஒரு மூலக்கூற்றை மெக்ஸிகோலேர்ந்து ஒரு கம் பெனி காப்புரிமைக்கு தாக்கல் செஞ்சிருக்கு.'

'அப்ப தாஸ் தவிர வேறொரு கும்பல் வேலை பாத்திருக்கு' என்றார் மராட்டே.'

டிசூஸா மர்மமாகப் புன்னகைத்தார் 'இந்த மெக் ஸிகோ கம்பெனியோட டைரக்டர்கள் பேரைப் பார்த்தேன். அதுல ஒருத்தர் பெயர் காஷிராம் தாஸ்.'

ராஜீவின் புருவங்கள் உயர்ந்தன 'பயோக்ரோம் டாக்டர் கே. தாஸ்? எப்பலேர்ந்து இவர் அங்க டைரக்டரா இருக்காரு?'

டிசூஸா கர்ச்சீப்பால் வியர் வையைத் துடைத்துக்கொண்டு சோபாவில் தொப் என அமர்ந்தார் 'மூணு வருஷமா இருக்கார். இந்தியாவுக்கு ஒரு பொறுப்புல போயிருக்கிறதா கம்பெனி அறிக்கையில தெரிவித்திருக்கி றது. அவங்களைப் பொறுத்தவரை யார் எந்த வேலை பார்த்தாங்கங்கறது முக்கியமாப்படல.

இன்னொரு டைரக்டர் அமெரிக்காவுல ஒரு கம் பெனியில கன்ஸல்டண்ட்டு.'

ராஜீவ் பயோக்ரோமை தொடர்பு கொண்டார். இருநிமிடங் களுக்குப் பின் 'இவங்களும் கன்ஸல்டண்ட் என்ற வகையிலேயே எடுத்தி ருக்காங்க. மூன்று வருடம் கான்ட்ராக்டு. மாத சம்பளத்தோட, ப்ராஜெக்ட் முடிஞ்சா, போனஸ்... ரெண்டு இடத்துல வேலை பாத்ததா குற்றம் சாட்ட முடியாது.'

'அவங்கநாலு மாசம் முன்னாடியே காப்புரி மைக்கு தாக்கல் பண்ணியாச்சு.'

'அப்ப இந்த சோதனை முடிவுகள் எல்லாம் முன்னாடியே போயிருக்கணும். இப்ப ஏன் அவ சரமா கிளம்பியிருக்கான், இந்த ஆளு?' என்றார் மராட்டே.

ராஜீவுக்கு சுனந்தாவின் நினைவுவந்தது. 'போனவாரம் பெரிசாரெண்டு பேருக்கும் வாக்குவாதம் என்றானே அந்த மதம்வார்?' சைக்யாட்ரிஸ்ட் வேறு, சுனந்தாவின் சூழலை ஆராய்ந்து பாருங்க என்றார்...

'சுனந்தா ஆய்வகத்துல கொடுத்த ஆணைகள் எல்லாம் ரெண்டுவாரம் முன்னாலிருந்து சோதனை போடுங்க மராட்டே. அவங்களுக்கு ஏதோ தகவல், இல்ல மாதிரிகளே சான்றாக கிடைச்சிருக்கணும். இவன் ஓட வேண்டி வந் திருக்கும். பயோக்ரோம் முழுசும் தேடுங்க. ஒரு ஆளை விடாதீங்க.'

# அத்தியாயம் 21

டாக்டர் மேத்தாவின் அறையை ராஜீவ் அடையும்போது இரவு ஏழு மணி. அலுவலகத்தில் பலரும் போய்விட்டிருக்க, மேத்தா அந்த ஹாலிலேயே தனித்து அறையில் இருந்தார்.

ராஜீவ் உள்ளே நுழைந்ததும், மேத்தா கதவைத் தாழிட்டார். அறையுள்ளே இருந்த சிறிய வட்ட மேஜையினருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு ராஜீவ் அருகே அமர்ந்தார்.

மிக மெல்லிய குரலில் ‘தாஸ் இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சிட்டோம்’ என்றார்.

ராஜீவின் முகத்தில் வியப்பைக் கவனித்த மேத்தா மெல்லப் பேசினார் ‘எங்க பிஸினஸ்ல உளவுகள் அதிகம். ரகசியங்கள் அதிகம்ங்கறதாலே, பணமும் அதிகம். ஒவ்வொரு நாட்டுலேயும் ஹேண்ட்லர்கள் இருப்பாங்க. கவர்மெண்ட் ப்ராஜெக்ட் வேணும்னா டீலர்கள், அரசியல்வாதிகளின் ஏஜெண்டுகள், சில நேரம் போட்டியாளர்களை ஒதுக்க நிழல் மனிதர்கள்... விடுங்க. எல்லா பிஸினஸ்லயும் இருக்கறதுதான்.’

‘எங்க பிடிச்சீங்க? தாஸ்ஸை எங்க வச்சிருக்

கீங்க?'

'பிடிக்கலை. ரியோலேர்ந்து தொடர்ந்தோம். அங்கிருந்து க்விட்டோ, ஈக்வடார்க்கு போயிட் டார். ஒரு பெரிய பங்களாவுல இருக்கார். யாருக்கு வேலை பாத்திருக்காருன்னு தெரி யலை. ஈக்வடார்ல யு.எஸ் டாலர் தான் லோக் கல் கரன்ஸி. சுகமா செலவழிச்சு, பாதுகாப்பா இருப்பார்னு நினைக்கறேன்' என்ற மேத்தா, கோட்டு பாக்கெட்டில்கை விட்டு ஒரு பேப்பரை எடுத்தார்.

'க்விட்டோவில், அவர் இருக்குமிடத்தின் முக வரி, பங்களாவுல இருக்கற ஃபோன் நம்பர் எல் லாம் இருக்கு. இனி மே நீங்க பாத்துக் கோங்க.'

'நன்றி' என்றார் ராஜீவ். 'தாஸோட ப்ராஜெக்ட் எப்படிபோயிட்டிருக்கு? கடைசிப் பகுதியில போய் விட்டுட்டுப் போயிட்டார்னீங்க. ரங்கன் பாத்துக்கிறாரா?'

மேத்தா பெருமூச்செறிந்தார். நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தவர் 'ஆடிட் இன்னிக்கு திடீர்னு வந்துட்டாங்க. முக்கியமா ஒரு குழறுபடி... ஆடிட்ட் ரெயில் இல்லாம, தானே எதையும் எடுக்கலாம், அழிக்கலாம்னு ஒரு செய்முறைப் படி... அதுல பிடிச்சவங்கதான்... விடல... தாஸ் ஏன் அப்படிப் பண்ணினார்னு தெரியலை. ப்ரா ஜெக்ட்டை மூடிடுவாங்க. இல்லைன்னா பெரிசா அபராதம் கட்டணும்னுவாங்க.

என்கிட்ட அடுத்த ப்ராஜெக்ட் இன்னும் ஆறு மாசத்துக்கு முன்னாடி வராது. அது வரை

பத்து எல்.சி.எம். எஸ் கருவிகள், ஆய்வுச் சாலை செலவு, ஆட்களோட சம்பளம்... எங்க போவேன்? பயோக்ரோம் க்கு இது முததடவை' மேத்தாவின் பேச்சில் கவலை தெறித்தது.

ராஜீவ் சில நொடிகளின்பின் 'உங்க ஆய்வகத் துல சில மாதிரிகளையும், அவற்றின் தகவல்க ளையும் தேடவிரும்பறேன். இரவு பகலா என் ஆட்கள் உக்காந்திருப்பாங்க' என்றார். மேத்தா மௌனமாக சரியென தலையாட்ட, ராஜீவ் எழுந்தார்.

'ஈக்வடார்? நம்ம நாட்டுக்கும் அதுக்கும் குற்ற வாளிகளைப் பிடித்துக் கொடுத்துக்கொள்ளும் ஒப்பந்தம் கிடையாது. 'தில்லி சொல்ல ராஜீவ் உறுதிப்படுத்திக் கொண்டார். ஏற்கெனவே சந் தேகித்ததுதான். இந்தியாவின் தீவிரவாதிகள் ஈக்வடாரில் அடைக்கலம் புகுந்திருப்பதை அறிந்தும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அரசு இருந்ததை அவர் அறிவார். 'மராட்டே, இனி நாம தாஸ் சொகுசாக வாழ்ந்து கொண்டி ருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.' என் றார் ராஜீவ். விரக்தியாக.

அபி வீட்டில் நுழைந்தபோது செல்ஃபோன் சிணுங்கியது. 'அபி?' என்ற பெண் குரல் அவன் 'யெஸ்?' என்றதும் தொடர்ந்தது. 'நான் பயோ ஜெனஸிஸ் ஹெச்.ஆர் மேனேஜர் ஆர்த்தி பேசறேன்.'

சொல்லச் சொல்ல அவன் அதிர்ந்தான்.

அபி அடுத்தநாள் காலை, பயோக்ரோமில்

ராஜீவைச் சந்தித்தபோது வாடியிருந்தான். 'பயோஜெனஸிஸ் மனித வளத்துறையிலேர்ந்து ஃபோன் வந்துச்சு. புது அப்பாயிண்ட்மெண்ட் எதுவும் வேணாம்னு போர்டு சொல்லிருச்சாம். ஏற்கெனவே வீட்டுக்கு ஈ.எம்.ஐ பாக்கி, வித்த பொருளுக்கு காசு வரமாட்டேங்குது. என்னை மாதிரி நேர்மையா போணும்னு நினைச்சா விக்க முடியாது சார். வினயா கை நழுவிப் போயி ருவாளோன்னு பயம்மா இருக்கு.' உடைந்து அழுபவனை என்ன சொல்வதெனத் தெரியாது திகைத்தார் ராஜீவ்.

'தற்காலிகமா ஒரு வேலை தர்றேன். செய்ய றியா?' என்றார் சில நிமிடயோசனைக்குப் பின். 'பயோக்ரோம்ல டர்மரின் மூலக்கூறு இருக்கும் மாதிரிகளைத்தேட வல்லுநர்களை நான் அழைக்கலாம். ஒப்புதல் இருக்கிறது. போட்டிக்கம்பெனியில் வேலை செய்வதால் வினயா வர முடியாது. எஸ்.ஐ.ஆர் விஞ்ஞானிகளோ, ஃபோரன்ஸிக் ஆட்களோ இதில் ஈடுபடுத்த லாம். அவர்களுக்கு உத்தரவு கிடைத்து இங்கு வர இரு நாட்களாகும். அதற்குள் வேலை முடிய வேண்டும் எனக்கு. உன்னால் இந்த கருவிகளின் மென் பொருளில் தேட முடியுமா? என்னால் இதற்கு ஒரு நாளைக்கு ஐயாயிரம் ரூபாய்தர முடியும்.'

உடனே ஒப்புக்கொண்டான் அபி. மேத்தாவின் அனுமதியுடன், ஆய்வகத்தின் அருகே ஒரு அறையில் அமர்ந்து, கணினியின் மூலம் சர்வரைத் தொடர்புகொண்டு மென்பொருளை

இயக்கத் தொடங்கினான். ஒரு மணி நேரம் கழிந்தும், இருமாதங்களின் டேட்டா மட்டுமே அவனால் கவனமாகப் பார்க்க முடிந்திருந்தது. கணினி மெதுவாக இயங்கியதால், ஆய்வகத் தின் உள்ளே, இயக்கத்தில் இல்லாதிருந்த ஒரு கருவியின் கணினியை இயக்க ஒப்புதல் வாங் கினான். வெளியே ஒருமுறை சென்று நடந்து வந்தான். வினயாவின் அழுத விழிகள் அவன் முன் பெரிதாக விரிந்தன. மனதை நிலைப் படுத்திக்கொண்டு ஆய்வகத்தின் உள்ளே நுழைந்தான்.

அபி மீண்டும் அந்தக் கருவியின் முன் அமர்ந்தான். பயோக்ரோமின் கருவிகளில் பல அவன் விற்றதுதான் எனினும், சிலகாலம் கடந்து விட்டதால், மென்பொருள் சற்றே புரிய கடினமாக இருந்தது... டர்மரின் கோப்புகளைத் தேடுவது அவ்வளவு எளிதல்ல என்பதை அவன் விரைவில் புரிந்துகொண்டான். எல்லா மாதிரிகளும், ஒரு சங்கேத மொழியில் ப்ரா ஜெக்ட் பெயர், தேதி என்று மாறும் தகவல்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. எங்காவது டர்மரின் என்ற பெயரைப் பிடித்து விட முடியுமா? என்று தேடினான். தாஸ்படு புத்திசாலியாக இருந்திருக்கிறார். ஒரு இடத்திலும் டர்மரின் என்று பெயர் வரவேயில்லை. இந்த ராஜீவ் என்ன கிடைத்துவிடும் என்று தேடச் சொல்கி றார்? டர்மரின் என்பதன் ஆய்வு முடிவுகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், முதலில் அது எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது. பல்லாயிரக்கணக்கான தகவல்

கோப்புகளுக்குள் எப்படி ஒவ்வொன்றாக எடுத்துப்பார்ப்பது?

கோமாவுக்கும் நினைவுக்குமாக அல்லாடும் சுனந்தாவை நினைத்தாலே அவனுக்கு பாவ மாக இருந்தது. அவர் நடுங்கும் விரல்களில் ஸ்கெட்ச் பேனாவைப் பற்றி வரைந்தது நினை வில் நின்றது. கோணலாக புள்ளிகள் வைத்து அதில் ஒரு யூ போன்ற வடிவம். லாபில் எந்த வடிவமும் அவர் வரைந்த வடிவில் இல்லை. அதோடு டர்மரின் 384... இந்த எண்ணும்...

அவன் மாதிரிகளை வைக்கும் தானியங்கி உறிஞ்சிகளை அசிரத்தையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இந்த ஆய்வகத்திலும் வெல்ப்ளேட்தான். அதிகம் மாதிரிகளை சோதனை செய்ய வேண்டுமென்றால் ப்ளேட்டு கள் நல்லது.

மாதிரிகள் கொண்ட பெட்டிகள் பெரிதும் சிறிதுமாக இருந்தன. 12 மாதிரிகள் கொண்ட பெட்டி. பின் 24. முந்தைய எண்ணின் இருமடங் காக மட்டுமே பெட்டிகளின் அளவு இருக்கும். ஏதோ நினைவில், கணினியில் எக்ஸெலைத் திறந்து மனமெங்கோ பறந்திருக்க, எண்களைத் தட்டச்சினான்.

12, அடுத்த கட்டத்தில், முதல் கட்டத்தில் இருந் ததை 2ல் பெருக்கினான் 12 x 2 = 24. அடுத்து 24 x 2 = 48, 48 x 2 = 96.

96 ப்ளேட்டுகள் வைப்பது இயல்பு. அதற்குமேல் அவன் பார்த்ததில்லை. 96 x 2 = 192. இதற்கும்

மேலுமா வைப்பார்கள்? அசுவாரஸ்யமாக மேலும் தட்டினான்.

192 x 2 = 384.

# அத்தியாயம் 22

வினயா திடுக்கிட்டு எழுந்தாள். இரவுமணி 2.15. செல்ஃபோன் அடிக்கிறதா? தூக்கக் கலக்கத்தில் உறுதிப்படுத்த சற்று நேரமானது. அடித்து நின்றுபோயிருந்த ஃபோன் மீண்டும் தொடங்கியது. அபிஜீத்... இந்த நேரத்தில்?

‘ஹலோ’ என்றாள் குழறி.

‘வினயா, எல் ஸி. எம். எஸ் ஸில் ஒரு பெட்டியில் அதிக பட்சம் எத்தனை மாதிரிகளை வைத்து சோதனை செய்திருக்கிறாய்?’

‘இதைக் கேக்கற நேரமா இது? கெட்லாஸ்ட்.’

‘ப்ளீஸ். சொல்லு.’ அவன் குரலில் இருந்த பரபரப்பு அவளை சற்றே விழிக்க வைத்தது. அடுத்த கட்டிலில் படுத்திருந்த அம்மா புரண்டு படுத்தாள்.

மெல்ல எழுந்து ஹாலுக்கு வந்து லைட்டைப் போடாமல் தடு மாறி சோபாவில் அமர்ந்தவாறே கிசுகிசுத்தாள் ‘96... வெல்ப்ளேட். தலைபோற விஷயமா இது?’

‘இதுக்கு அப்புறம் எத்தனை ப்ளேட் வைக்கிற தட்டு, ஆட்டோ சாம்ப்ளர்ல வரும்?’

‘384 போனவருஷம் 384 வெல்ப்ளேட் ஆட்டோ சாம்ப்ளர்வாங்...’ அவள்குரல் தேய்ந்தது.

‘மைகாட். 384! அபி, 384 வெல்ப்ளேட்!’

‘என்னடிசத்தம்?’ அம்மாவின் எரிச்சலான குரல். ‘ஒண்ணுமில்லேம்மா. ஹால்ல எலிஎதோ தட்டி விட்டிருக்கு.’

‘அபி, சுனந்தா அதான் புள்ளி புள்ளியாவச்சு ஒரு செவ்வகத்தை வரைஞ்சிருக்காங்க. 384 வெல்ப்ளேட் டோடமாதிரிகள் வைக்கும் அமைப்பு அது!’

‘கரெக்ட். அதுல கச்சிதமான யு வடிவம். இரண்டாம் வரிசையில இரண்டாம் மாதிரியில் தொடங்கி கீழே ஒவ்வொரு வரிசையிலும் வந்து பின், இரண்டாம் வரிசையில் கடைசி மாதிரிக்கு முந்திய மாதிரியில முடியுது!’

‘அது எல்லாம் டர்மெரின் கொண்ட மாதிரிகளா இருக்கணும். எங்க இருக்கே?’

‘பயோக்ரோம்ல. மேத்தாவோட ஸ்பெஷல் பர்மி ஷனோட நேத்து சாயங்காலம் வந்தேன்.’

‘24 மணி நேரமும் அங்க மாதிரி காப்பாளர்கள் இருப்பாங்க. அவங்க மென் பொருளை இயக்கி திரையில வைச் சுக்கிட்டே என்னைக் கூப்பிடு’ வினயா பர பரப்பாக ஆணைகள் பிறப்பித்தாள்.

‘கல்யாணம் ஆகறதுக்கு முன்னேயே இவ இப்படி ஆர்டர் பண்ணினா...’ முணுமுணுத்துக் கொண்டே அபி, மாதிரிகள் வைத்திருக்கும்

இடத்தை நோக்கிப் போனான். அவன் அழைக்கவும் வினயா உடனே எடுத்தாள்.

‘எல்லா ஃப்ரீஸரும் இருக்கிற ப்ளூப்ரிண்ட். தெரியுது. அதுல ஒவ்வொரு ப்ரீஸரையும் சொடுக்கினா, அதுல இருக்கிற ஷெல்பு ஒவ்வொண்ணா திரையில வருது’ என்றான் அபி.

‘வலதுபக்கம், 12, 24, 48, 96ன்னுசைஸ்போட்டிருப்பாங்கபாரு.’

‘ஆமா.’

‘அதுல 384 இருக்கா?’ வினயா பரபரத்தாள்.

‘இல்லை’ வினயா தளர்ந்தாள் ‘நல்லாபாரு.’ ‘இல்லை’ என்றான் ஒரு நிமிடத்தின்பின்.

‘ஓகே. மாதிரி இருக்கறது தவிர வேற வெற்றிடம் இருப்பதாகக் காட்டுதா?’

‘ஆ... ஆமா. ரெண்டுஷெல்புல நாலு பெரிய வெற்றிடம் இருக்.’

இடைவெட்டினாள் வினயா ‘ப்ரீஸரைத் திறந்து அந்த இடத்துல எதாவது இருக்கான்னு பாரு. நீயாதிறக்காதே. சாவி வேணும். அந்த காப்பாளரைத் திறக்கச் சொல்லு.’

‘அதுல நாலு 96 வெல்ப்ளேட் இருக்கு. 384 வெல்ப்ளேட் பெட்டி இல்லை.’

‘அப்படியே நாலும் அதே பொசிஷன்ல இருக்கற மாதிரி வெளிய எடு. இப்ப இடது பக்கம் மேல இருக்கிற 96 பெட்டியில 2வது வரிசை 1 வது மாதிரி என்னன்னு பாரு.’

‘வினயா. அது 384 வெல்ப்ளேட் இல்லை, 96 வெல்ப்ளேட்.’

‘முட்டாள். நாலு 96 சேர்ந்து வைச்சா ஒரு 384 அமைப்பு கிடைக்கும்.’

வியந்து போனான் அவன். 384 கட்டங்களுள்ள படத்தை எக்ஸலில் வரைந்து ப்ரிண்ட் செய் தான். அதில் கவனமாக யுவடிவத்தை வரைந்து, அது எந்த மாதிரிகளின் இடத்தைத் தொட்டுச் செல்கிறதோ, அந்த இடங்களில் 96 மாதிரிகள் கொண்ட பெட்டிகளில் இருந்து மாதிரிகளை எடுத்து ஒரு பேனாவால் குறித்து அதே இடங் களில் மீண்டும் வைத்தான். அதேபோல் ஒவ்வொரு ஃப்ரீஸரிலும் விடுபட்ட பெட்டிக ளைத்தேடி, மாதிரிகளைக் குறித்து வைத்தான். விடிகாலை 5 மணிக்கு, அங்கேயே ஒரு சேரில் சாய்ந்து உறங்கிப்போனான்.

காலை 9 மணிக்கு மராட்டே, ஃபோரன்ஸிக் வல்லுநர்கள் சூழ, பயோக்ரோமில் நுழைந்தார். ஃப்ரீஸர்களைத் திறந்து ஃபோட்டோகளை எடுத்ததோடு, மாதிரிகள் நிறைந்த நாலு 96 வெல்ப்ளேட் பெட்டிகள் கொண்ட அமைப்பு களை தட்டுகளில் வைத்து எடுத்துப் போனார் கள்.

ராஜீவ் அவனை அணைத்து தட்டிக் கொடுத் தபோதும், வெளியே புன்னகைத்தாலும் அவன் உள்ளூர வாடியிருப்பதை ராஜீவ் காணத்தவற வில்லை.

மராட்டே இரவு ஒரு மணிக்கு ராஜீவை அழைத்

தார். ‘சார், மன்னிக்கணும். முக்கியமான செய்தி.’

‘தாஸ் போறதுக்கு முன்னாடி தொடர்புகொண்ட ஆள் ஒரு காய்கறி வியாபாரி.’ ராஜீவின் புருவங்கள் சுருங்கின. இதைக்காலேல சொல்லலாமே?

‘அது சிம் கார்டு வாங்கின ஆளு… ஆனா பயன்படுத்தியது…’

# அத்தியாயம் 23

பயோஜெனஸிஸ் நிறுவனத்தின் பங்குகள் உச்சத்தில் போய்க் கொண்டிருப்பதாகக் காட்டிய தொலைக்காட்சி திரைகளைக் கவனியாது ராஜீவ் வரவேற்ப தாண்டி நேராகரிஜ் வானியின் அறையில் நுழைந்தார்.

‘யெஸ் மிஸ்டர் ராஜீவ்’ என்றார் ரிஜ்வானி, தனது லேப்டாப் பின்திரையைப் பார்த்தவாறே.

‘உங்கள் லேப்டாப்பை மூடிவிட்டு என்னுடன் பேச வேண்டும்.’

ரிஜ்வானி சற்றே துணுக்குற்றார். இப்படி அவரிடம் யாரும் பேசியதில்லை.

‘ஸாரி. சொல்லுங்கள். ஏதோ முக்கியமான விஷயம் என்றீர்கள் ஃபோனில். அதான் என் அப்பாயின்ட்மென்ட்டுகளைத் தள்ளிப் போட்டு’ அவர் முடிக்கவில்லை, ராஜீவ் தன் குரலை உயர்த்தினார்.

‘அப்பாயின்ட்மென்ட் இல்லையென்றால் சிறையில் வந்து பார்த்திருப்பேன் மிஸ்டர் ரிஜ்வானி. கார்ப்பரேட் எஸ்பியனேஜ் பயோக்ரோம் தணிக்கையில் தண்டிக்கப்படுமாறு வைப்ப

தற்கு அவர்கள் பணியாளர் தாஸ் என்பவருக்கு நீங்கள் லஞ்சம் கொடுத்திருக்கிறீர்கள்.’

‘பொய். எனக்கும் அதற்கும் எந்த தொடர்பு மில்லை.’

‘நீங்கள் பேசியதன் ட்ரான்ஸ்க்ரிப்ட் என்னிடம் இருக்கிறது. சிம்கார்டு வேறுயார் பெயரிலோ வாங்கி நீங்கள் பயன்படுத்தியிருக்கிறீர்கள். ராம்சிங் என்ற காய்கறி வியாபாரி, உங்கள் செக்யூரிட்டி அனைவரும் உண்மையை ஒப்புக் கொண்டுவிட்டார்கள்.’

‘அதோடு... தாஸ் உங்களிடம் டர்மரின் பற்றிச் சொல்லவும், பயோக்ரோமின் கருவிகளை யும் இடத்தையும் அதற்குப் பயன்படுத்த தூண்டியிருக்கிறீர்கள். தாஸ் பங்களாதேஷ் பாஸ்போர்ட் கிடைத்து மலேசியா போகவும் உதவியிருக்கிறீர்கள். ஒப்பந்தப்படி, தகவல்கள் அடங்கிய ஹார்ட்டிஸ்க்கை உங்கள் ஆட்களிடம் கொடுத்துவிட்டு அவர்களோடு தாஸ் ரியோ செல்வது உங்கள் திட்டம். அதன்பின் சோத னைகள் அங்கிருக்கும் உங்கள் லாபில் செய்யப் பட்டதாகவும் காட்டி காப்புரிமை வாங்க நீங்கள் இட்ட திட்டம் உடைந்தது மலேசியாவிலல்ல... இங்கேயே’ ரிஜ்வானியின் தாடை இறுகியது.

‘தாஸ், யாருக்கும் தெரியாமல் டர்மரின் சோத னைகளை ஹார்ட்டிஸ்க்கிலிருந்து எடுத்து தன் யு.எஸ்.பியில் வைத்துக்கொண்டுவிட்டார். உங்கள் மலேசியா பார்ட்டி, அவரோடு சேர்ந்து உங்களை ஏமாற்றத் திட்டம் போட்டிருந்தான்.

யூ. எஸ் பி யை தனியாகக் கொண்டுவந்து, துணைக்கு வந்தவர்களை அழித்துவிட்டு இருவரும் ரியோ செல்லத் திட்டமிட்டிருந்தனர். ஹார்ட்டிஸ்க்கில் அனைத்தும் இருப்பதாக நம்பிய மலேசிய பார்ட்டியிடமிருந்து, தாஸ் ஏர்போர்ட் போகுமுன்னே யூ.எஸ்.பியோடு தப்பிவிட்டார்.

இதெல்லாம் மலேசிய பார்ட்டி ஒப்புக் கொண்டவை. ஹார்ட்டிஸ்க்கில் தேவையான சோதனை தகவல் இல்லை என்றதும் பொங்கி எழுந்து அவன் சொன்ன வாக்குமூலம். தாஸ் அனைவரையும் ஏமாற்றிவிட்டு, இப்போது..' ராஜீவ் நிறுத்தினார்.

'ஆறு மில்லியன் டாலர்' என்றார் ரிஜ்வானி. 'ராஜீவ், ஆறு மில்லியன்டாலர் செலவழித்திருக் கிறேன். தாஸ் மட்டும் ஒரு மில்லியன் வாங்கியி ருக்கிறார். என்னை ஏமாற்றியவனை அவ்வளவு எளிதில் விடமாட்டேன்.'

ராஜீவ் அமைதியாக இருந்தார். 'உங்கள் சண் டையில் தலையிட நான் விரும்பவில்லை. என் வேலையுமில்லை. ரிஜ்வானி, தாஸ் இருக்குமி டம் தெரிய வேண்டுமென்றால் நம்மிடையே சில ஒப்பந்தங்கள் செய்யப்பட வேண்டும்.'

ரிஜ்வானி மெல்ல நிமிர்ந்து ராஜீவின் கண்களை நேராக நோக்கினார். 'டெல்மி. உங்கள் கோரிக் கைகள் என்ன?'

பத்து நிமிடப் பேச்சின் பின் ரிஜ்வானி எழுந்தார். 'ஆல்ரைட். ராஜீவ். ஆர் வி டன்? அல்லது இன்

னும் எதாவதுஇருக்கா?’

‘இருக்கு’ என்றார் ராஜீவ் புன்னகைத்தபடி. ‘இது பெர்சனல்.’

# அத்தியாயம் 24

தலைநகர் க்விட்டோ நகர் ஈக்வடாரின் பெரிய நகரமில்லை. குழுமங்களினிடையேயான தாக்குதல்கள், போதைப் பொருள் கும்பல் அடிதடி என, 16 நபர் ஒரு லட்சம் பேருக்கு துப்பாக்கிச் சண்டையில் வருடந்தோறும் இறக்கும் விகார விகிதம்கொண்ட நாடு ஈக்வடார். பெரும்பாலும் ஸ்பானியர்கள் மற்றும் உள்நாட்டு இனம் கலந்த மெஸ்டிஜோ எனப்படும் மக்கள் பெருவாரியாக வாழும் ஈக்வடாரில் வறுமையால் கொள்ளையும், போதைப் பொருள் கடத்தும் குழுக்களின் போரும் நாட்டை ரணகளப் படுத்திக்கொண்டிருக்கின்றன.

க்விட்டோவின் போதைப் பொருள் கடத்தும் குழுக்களில் ஒன்றிற்கு செய்திவந்தது... மெஸ்டிஜோ க்கள் மூன்று பேர் ஒரு காரில் கிளம்பி, பங்களா ஒன்றின் அருகில் இரண்டு மணி நேரம் காவலைக் கவனித்தனர். இரு காவலாளிகள் வெளியேறி மற்று மிருவர் வரும் நேரம் வரும் போது, கொலம்பியாவிலிருந்து கடத்தப்பட்ட ஆடோமேடிக் துப்பாக்கிகளை டிக்கியிலிருந்து எடுத்துக்கொண்டு மூன்று திசைகளில் பிரிந்து பங்களா நோக்கி விரைந்தனர்....

‘மராட்டே, இன்றிரவு தில்லி கிளம்பறேன். கேஸ் முடிஞ்சாச்சு’ என்றார் ராஜீவ் காலையில்.

மராட்டே வியப்புடன் பார்த்தார். ‘எப்படி முடிஞ் சது? அந்த தாஸ்?’

‘இறந்துவிட்டார். க்விட்டோ நகர போலீஸ் ஒரு பங்களாவில் குண்டுகளால் துளைக்கப் பட்ட கதவின்பின் விழுந்து கிடந்த அவரது உடலை நேற்று மாலை எடுத்திருக்கிறார்கள். பங்களாதேஷ் பிரஜை என்று அந்நாட்டைத் தொடர்புகொண்டால், அவர்கள் ‘இந்த ஆள் எங்க நாட்டுக்காரன் கிடையாது’ என்கிறார்கள். விவாதம் தொடர்கிறது. நம்ம கேஸ் முடிஞ்சாச்சு.’

‘ஓ. யாரு கொன்னாங்க?’

‘தெரியாது. ஈக்வடாரில் பணத்துக்குக் கொல் லும் குழுக்கள்பலர் உண்டு. அதில் யாரோ பணம் வாங்கிக்கொண்டு...’

‘யார் கொடுத்திருப்பாங்க சார்? பயோக்ரோம் மேத்தா?’

‘நம்ம கவலை அது இல்லை மராட்டே. உங்க கேஸை மூடிரலாம்.’

இந்த ஆளு இப்படி ஒரு மனுஷத்தன்மையோ, போலீஸுக்கே உள்ள ஆர்வமோ இல்லாம இருக்கானே என்று நினைத்தார் மராட்டே.

‘வாங்க.’ வரவேற்றார் மேத்தா முகமெல்லாம் சிரிப்பாய். ‘பயோஜெனஸிஸ் கிட்டேருந்து ஒரு ப்ராஜெக்ட் இப்பசப் கான்ட்ராக்ட்ல கிடைச்சி

ருச்சு. பெரிய ப்ராஜெக்ட் இல்ல. இருந்தாலும் ஆறு மாசத்துக்கு பணியாளர்களுக்கு பட்டினி இல்லாம சோறு போட முடியும்.'

'வெரிகுட். தணிக்கை அறிக்கை என்ன சொல்லுது?'

'லாபை மூடச் சொல்லலை. அபராதம் 1 மில்லியன்டாலர். கொஞ்சம் இடிக்கும் தான். என்ன செய்ய முடியும்? தாஸ் பண்ணினதுக்கு நாமும் தான் பொறுப்பு. சுனந்தா முதல்ல சொன்னப் போவே சுதாரிச் சிருக்கணும். அப்ப சரியாப் பாத்திருந்தா. இந்த நிலைமை வந்திருக்காது. பெரிய சயன்டிஸ்ட்னு நம்பிட்டோம். இப்ப ரொம்ப ஸ்ட்ரிக்டா இருக்கோம்.'

ராஜீவ் விஷமமாக பார்த்தார், 'பயோஜெனஸிஸ் தானாவே கொடுத்தாங்களா? இல்லை...'